Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

දිනක්කතිර්

ஒளி - 02 - கதிர் - 65 23.06.2001 சனிக்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 5/-

உங்களின் சகல விதமான
அச்சுத்தேவைகளுக்கும்
இன்றே நாடுங்கள்

ஈஸ்ரன் கிராபிக்ஸ்

230, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
☎24821

## தற்போதய நெருக்கடிக்கு மத்தியில் சந்திரிகா,ரணிலை அழைத்து பேச்சுவார்த்தை!

(நமது நிருபர்)

தற்போதய அரசியல் நெருக்கடி நிலைக்கு மத்தியில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை அழைத்து பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

இப்பேச்சுவார்த்தையின் போது இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் பூரண ஒத்துழைப்பு வழங்கவிருப்பதாக ரணில் விக்கரமசிங்க ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார் என ஜனாதிபதி செயலகம் நேற்று அறிவித்துள்ளது.

முற்பகல் 11 மணியளவில் ஜனாதிபதி மாளிகையில் இருதலைவர்களும் தனியாக சந்தித்துப் பேச்சுக்கள் நடாத்தியுள்ளனர்.

இப்பேச்சுவார்த்தை தொடர்பான மேலதிக விபரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

இதேவேளை தேசிய அரசு அமைக்கும் யோசனையை ஜனாதிபதி ரணிலிடம் முன்வைத்தாரா என்பது குறித்த எதுவித தகவல்களும் வெளியாகவில்லை.

# நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

## மூன்று தமிழ் கட்சிகள் ஆதரவு! அடுத்த மாதம் விவாதம்!!

(நமது நிருபர்)

**ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானப் பிரேரணை மனு நேற்றுக் காலை 9.45 மணிக்கு நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகத்திடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 96 உறுப்பினர்கள் இதில் கையொப்பமிட்டுள்ளனர்.

இந்த மனுவை ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கருஜயசூரிய, காமினி அததுக்கோரள, லொக்குபண்டார ஆகியோருடன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் வீ.ஆனந்தசங்கரி, ரெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் அ.விநாயகமூர்த்தி ஆகியோர் நாடாளுமன்றச் செயலாளரிடம் தாக்கல் செய்தனர்.

இந்த மனுவில் மக்கள் விடுதலை முன்னணி இன்னும் கையொப்பமிடவில்லை. இக்கட்சி இன்று சனிக்கிழமை தனது அரசியல் குழுக்கூட்டத்தைக் கூட்டி

(8ம் பக்கம் பார்க்க)

## கி.பல்கலைக்கழக நூலக வாரம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது

(நமது நிருபர்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நூலக வாரம் நேற்றுக்காலை பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் மா.செ. மூக்கையாவினால் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

காலையில் பல்கலைக் கழக பதில் நூலகர் திருமதி தவமணி அருள்நந்தி தலைமையில் ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்றன. உதவி நூலகர் தீசன் ஜெயராஜின் வரவேற்புரையுடன் ஆரம்பமானது ஆரம்ப நிகழ்வில் திருமதி தவமணி அருள்நந்தி தலைமையுரையாற்ற நூலகக் குழுத்தலைவர் பேராசிரியர் மௌனகுரு, உபவேந்தர் பேராசிரியர் மா.செ. மூக்கையா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து ''மல்டி இன்போம்'' சிறப்பிதழ் வெளியீடும்.

(8ம் பக்கம் பார்க்க)

## புன்னைச்சோலை ஆலயத்தில் எட்டாயிரம் பேர் தீமிதிப்பு

(அரியம்)

மட்டக்களப்பு புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயத்தில் நேற்று ஏழாயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட அடியார்கள் தீ மிதித்தல் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

நேற்றுக் மாலை 5 மணிக்கு தீ மிதித்தல் வைபவம் ஆரம்பமாகி இரவு 9 மணிவரையும் இடம் பெற்றது. என்றுமில்லாதவாறு இவ்வருடம் அதிகூடிய அடியார்கள் தீ மிதித்தலில் ஈடுபட்டனர்.

ஆண்களும் பெண்களும் அதிகளவில் கலந்து கொண்டதுடன் சிறுகுழந்தைகளை ஏந்தியவாறும்

(8ம் பக்கம் பார்க்க)

## 'தினக்கதிர்' ஆதரவுடன் பரிசளிப்பு விழா!

(நமது நிருபர்)

தினக்கதிர் ஆதரவுடன் ஐ.பி.எஸ். அனுசரணையுடன் எருவில் இளைஞர் கழகமும், கண்ணகி விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்திய கலாசாரப்போட்டியின் பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை எருவில் கண்ணகி மகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

இளைஞர் கழகத் தலைவர் சுந்தர் துசியந்தன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினர்களாக

(8ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபடும் நிலை

(நமது நிருபர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பேரியல் அஷ்ரப், யு.எல்.எம்.மொகிடீன், யு.எல்.எம். ஹனிபா ஆகியோரை வெளியேற்றுவதென்று கட்சியின் உயர்மட்டம் முடிவுசெய்துள்ளதாகத் தெரியவருகிறது. கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் இரகசிய இடம் ஒன்றில் வியாழன் இரவு 8 மணி முதல் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது.

## கல்லாற்றில் பொலிஸ் கான்ஸ்டபிள் சுட்டுக்கொலை

(வேதாந்தி)

மட்டக்களப்பு கல்லாற்று பிரதான வீதியில் வைத்து நேற்றுமாலை 5 மணியளவில் பொலிசார் ஒருவர் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் எஸ். பண்டார(32) வயது என அடையாளம் காணப்பட்டுள்ளார். பெரிய கல்லாற்று பொலிஸ் காவலரனில் கடமையாற்றும் இவர் நீலாவணைக்கு மோட்டார் சைக்களில் சென்று கொண்டிருக்கும் போது துப்பாக்கி சூடு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## மூதூர் பிரதேசத்தில் படையினர் தேடுதல்

(நமது நிருபர்)

திருகோணமலை மாவட்டம்-மூதூர் பிரதேசத்தின் கிழக்கே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஈச்சிலம்பற்று, கடுக்காமுனை,

(8ம் பக்கம் பார்க்க)




**உடனடி வேலைவாய்ப்பு**

1. முஸ்லிம், முஸ்லிம் அல்லாத வீட்டுப் பணிப்பெண்களுக்கு முற்றிலும் இலவசமாக சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைக்கப்படும். வயதெல்லை 25 தொடக்கம் 40 வரை (குவைத், பஹ்ரைன், ஜோர்தான், டோகா கட்டார் போன்ற நாடுகளுக்கும் அனுப்பப்படும்)
1. டோகா கட்டார் இலும் உடனடி வேலைவாய்ப்பு (ஆண்களுக்கு)

- ALUMINIUM FABRICATORS,
- ALUMINIUM INSTALLER,
- ALUMINIUM FABRICATORS,
- ALUMINIUM FITTER.
- TILE PIXER,
- MASON,
- CARPENTER,
- PAINTER,
- ELECTRICIAN,
- ELECTRONIC TECHNICIAN

உடனடிப் பயணம்

போன்ற வேலைவாய்ப்புகளும் உண்டு சான்றிதழ்களுடன் நேரடியாக வரவும்.

**நியூபாஹிம் என்டப்பிரைஸஸ்**

LL No -736

**283/1 பிரதான வீதி, கொழும்பு.**

***விசாரணைகளுக்கு:***

**இல:15/1, 15/2, பிரதான வீதி, காத்தான்குடி -02**

065-47090 ADVT.

# தினக்கதிர்

த.பெ. இல: 06
155.திருமலை வீதி,
மட்டக்களப்பு,
தொ.பே.065.22554
E mail:- tkathir @ sltnet.lk


## 'மீனுக்கும் வால்'

எமது தமிழ் அரசியல்வாதிகளுக்குச் சில சமயங்களில் தாம் என்ன பேசுகிறோம் என்பதே புரிவதில்லைப் போலிருக்கிறது.

அண்மையில், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி) பொதுச் செயலாளரும் வடக்குக் கிழக்குப் புனர்வாழ்வு, புனர்நிர்மாணத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிட்டுள்ள கருத்து இதனையே புலப்படுத்துகிறது.

"ஐ.தே.க.அரசாங்கம் அமைக்குமானால் அதிலும் இணைந்து செயற்படத் தயார்" என்பதே அவர் வெளியிட்டுள்ள கருத்தாகும்.

"முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தபோது அவர்களுடன் இணைந்து செயற்பட்டோம். பின்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி அதிகாரத்திற்கு வந்தபோது அவர்களுடன் இணைந்து செயல்பட்டோம்" என்று தனது நிலைப்பாட்டை விளக்கிக் கூறியுள்ள டக்ளஸ்,

"மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வாய்ப்புக்களும், சந்தர்ப்பங்களும் ஏற்பட்டால் ஐ.தே.க.வுடன் இணைந்தும், செயற் படுவோம்" என்றும் கூறியுள்ளார்.

இவர்கள் அவ்வப்போது ஆட்சிக்கு வரும் கட்சிகள் எதுவாக இருந்தாலும் அதனுடன் இணைந்து செயற்படத் தயாரானவர்கள் என்பது ஒன்றும் அதிசயமான விடயமல்ல.

ஆனால், இதனை அவர் தனது வாயினாலேயே சொல்லித் தீர்த்திருப்பதுதான் வெட்கக்கேடானது.

தேர்தல் நடாத்துவதற்கு இயல்பான ஒரு சூழல் இல்லாத நிலையில், மக்கள் பெருமளவில் வாக்கெடுப்பிலேயே கலந்து கொள்ளாமல் நடந்த ஒரு தேர்தலில், எப்படியோ வெற்றி பெற்று இவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆனார்கள்.

பின்பு, ஆட்சி அமைக்கக்கூடிய கட்சியின் பக்கம் இணைந்து ஆட்சிபீடம் ஏறி, அமைச்சர் பதவியும் பெற்றுக் கொண்டனர்.

இதுவெல்லாம் ஒரு அரசியல் இராஜதந்திரம் என்றே அவர்கள் சொல்லலாம். அப்படியே இருக்கட்டும்.

ஆனால் இதற்கெல்லாம் இவர்கள் சொல்லும் காரணம் 'மக்களுடைய நன்மை' என்பது.

"மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் எக் கட்சியுடனும் இணையத் தயார்" என தமது நிலைப் பாட்டுக்கு கொள்கை விளக்கம் தருகின்றனர் இவர்கள்.

இவர்கள் எந்த மக்களின் என்ன நன்மையை, தேவையைக் குறிப்பிடுகின்றனர?

தமிழ் மக்களுடைய இன்றைய தேவை, சொந்த ஊர்களை விட்டு விரட்டியடிக்கப்படுவதும், சொத்துக்கள் சூறையாடப்படுவதுமா?

அல்லது, அவசரகால, பயங்கரவாதச் சட்டங்களுக்குக் கீழ் காரணமின்றிக் கைது செய்யப்பட்டு, சித்திரவதைகள் மூலம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு, வருடக்கணக்காக சிறையிலடைக்கப்படுவதா?

அங்கேயும் கூட, வகைதொகையின்றி, ஈவிரக்கமற்று, கத்தி, கோடாறி, இரும்புக் கம்பிகொண்டு தாக்கிக் கொல்லப்படுவதா?

இத்தகைய தமிழ் மக்களின் 'தேவை' (?) கருதித்தான் இவர் கள் இவ்வளவு காலமும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுடன் இணைந்திருந்தார்களா?

இவற்றைத் தவிர இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கென்று வேறு எதைத்தான் விஷேடமாக செய்துவிட்டது?

இப்போது முஸ்லிம் காங்கிரசுடன் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக இந்த அரசு கவிழ்ந்து போகலாம் என்ற அச்சம் ஏற்பட்டதும் அந்தப் பக்கத்திலும் சில ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்து வைக்கும் நோக்குடன் "மக்களுடைய தேவை" என்று நியாயம் கூறி கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

"பாம்புக்கு வாலையும் மீனுக்குத் தலையையும் காட்டுதல்" என்று ஒரு பிரபலமான சொற்றொடர் ஒன்று.

இங்கு நடப்பதோ " பாம்புக்கும் வால், மீனுக்கும் வால்" என்பது போன்றே அமைந்துள்ளது.

எப்படியோ அரசியல் வியாபாரம் இலாபகரமாக ஓடினால் சரி என்று நினைக்கிறார்கள் போலும்.

# இன்று நாடு உள்ள சூழ்நிலையில் குடிசன மதிப்பீடு ஒன்று தேவைதானா?

(நேற்றையத் தொடர்ச்சி....)

எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கா நானும் சந்தரிகாவும் ஒன்றாகவே ஒரே பாடசாலையில் ஆரம்பத்தில் வித்தை கற்றுக் கொண்டவர்கள் என்று சொல்லிக்கொண்டு புறாவின் மற்ற இறகைப் பிடித்துக்கொண்டு ஊர்வலம் நடத்துகிறார். எல்லோரும் வாருங்கள் புறாவை பறக்க விடப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டு இருவரும் புறாவைக் கையில் வைத்துக்கொண்டு தங்கள் ஏமாற்று வித்யையில் ஈடுபட்டுவருகின்றார்கள். கடந்த அரை நூற்றாண்டாக இப்படியான பல வித்தைகளை தமிழ் தலைவர்களுக்குக் காட்டி அவர்களை ஏமாற்றியது போல் விடுதலைப் புலித் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை ஏமாற்றிக்கொள்ள முடியாது. இரு தலைவர்களும் திசை மாறி ஓடிக்கொண்டு திரிகிறார்கள்.

இந்தியாவிலே யுத்தத்தினால் வெறுப்படைந்த அசோகச் சக்கரவர்த்தி சித்தாத்தரின் சிந்தனைகளைப் பின்பற்றி பௌத்த மதத்தை இந்தியாவிலும், அதனை அண்டிய நாடுகளிலெல்லாம் பரப்பி பல பௌத்த தூபிகளையும் அமைத்ததோடு இலங்கையில் பௌத்த மதத்தைப் பரப்புவதற்கு தனது மகன் மகேந்திரனையும், மகள் சங்கமித்திரையையும் அனுப்பி தேவநம்பியதீசன் காலத்தில் பௌத்த தர்மம் இலங்கையில் பரப்பப்பட்டது. அசோக சக்கரவர்த்தி கலிங்கத்தை யுத்தம் மூலம் வென்றபோதிலும் அதனால் ஏற்பட்ட உயிர் இழப்புகள் தான் அவரை யுத்தத்தில் வெறுப்படையச் செய்தது. அப்படியான ஒருவரால் பௌத்த மதம் உருவாக்கப்பட்ட நாட்டிலே 25 வருடங்களாக உபயோகமில்லாத யுத்தம் நடைபெற்றுக் கொண்டுவருகிறது.

மிகவும் கொடிய விலங்கானது புலி. அப்படியான புலியை பௌத்த பிக்குகள் அன்பினால் அரவணைத்து இளம் பிக்குகள் கூடி விளையாடுகிறார்கள். அப்படியான அன்பு உள்ளம் கொண்ட பௌத்த குருமார் விடுதலைப் புலிகளுடன் அன்புகொண்டு ஒரு சமாதான முயற்சிக்கு ஏன் வரமுடியாது என்று கேட்பவர்களும் பௌத்தர்களில் இருக்கிறார்கள்.

நாங்கள் விடுதலைப் புலிகளுடன் சமாதானம் பேசுவதற்கு முன்பு அரசாங்கம் நிருவாகத்தை பரவலாக்குவது, அதிகாரம் வழங்கப்படுவது என்று சொல்லிக்கொண்டு போகாமல் வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு வழங்க விருப்பது என்ன என்பதை தெளிவு படுத்திச் சொல்லவேண்டும். அவரின் தந்தையின் சிந்தனைப்படி ஒரு சமஷ்டி கூட்டாட்சியை வடகிழக்கில் ஏற்படுத்தும்போது யார் உதவியுமில்லாது சமாதானம் ஏற்படுமென்ற கருத்தையும், பௌத்த குருமாரில் ஒரு சாரார் தெரிவிக்கிறார்கள்.

இந்தியாலில் இருந்து ஒரு பத்தினித் தெய்வமான கண்ணகிக்கு கஜபாகு மன்னன் ஆட்சிக் காலத்தில் கோவில் அமைத்து கண்ணகியை ஒரு பத்தினி தெய்வமாக பௌத்தர்கள் மதித்து இன்னும் வழிபாடு வருகிறார்கள். அத்தோடு இலங்கையின் தலைவியாக ஒரு பெண் நாட்டை ஆட்சி செலுத்தி வருகிறார். ஆனால் ஒரு பெண் சுதந்திரமாக தனியாக வீதியில் செல்ல முடியாது, விட்டில் தனியாக இருக்க முடியாத ஒரு பாதுகாப்பு அற்ற சூழ்நிலை உருவாகிக் கொண்டே வருகிறது. தினசரி எங்கு பார்த்தாலும் பெண்களுக்கெதிரான பாலியல் சம்பவங்களே அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இந்தச் சம்பவத்திற்கும் குடிசன மதிப்பீட்டு பத்திரத்தில் ஒரு இடம் கொடுக்கக் கூடியளவு சம்பவங்கள் நடை பெற்றுக்கொண்டே வருகிறது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பௌத்தம், பத்தினி தெய்வ வழிபாடு இரண்டும் இலங்கையில் வெறும்

ஊடகவியலாளர்
**வி.பி.சிவப்பிரகாசம்**

கேலிக் கூத்தாகவே மாறிக்கொண்டு வந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

வடகிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு சமாதானப் புறாவை வைத்திருப்பவர்களிடமிருந்து புறாவைப் பிடிப்பதற்கு நோர்வே நாட்டு புறா வேட்டைக்காரர் பலமுறை வந்து புறாவை உயிருடன் பிடிப்பதற்கு கண்ணிவைத்து முடியாத நிலையில் நாடு திரும்பி உலக சாதனையை நிலை நாட்டியிருக்கிறார். இப்போது புறா அரசு பக்கமா, எதிர் கட்சி பக்கமா அல்லது வடகிழக்கு அரசு பக்கமா என்று வேறு பல நாட்டு புறா வேட்டைக்காரர் ஆய்வு செய்வதில் ஈடு படுவதாகத் தெரியவருகிறது.

கால் நூற்றாண்டு காலமாக விடுதலைப் புலிகள் யுத்தத்தில் ஈடுபட்டபோதிலும் வடகிழக்கை ஆட்சி செய்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளிடம் தரைப் படை முதல் எல்லாவகையான படைகளும், ஆயுதங்களும் இருக்கிறது என்று அரச படையினர் பல சந்தர்ப்பங்களில் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களிடத்தில் தனியான கப்பல் இருக்கிறது. அவற்றில் ஆயுதங்கள் கூட வருகிறது என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் தேசாதிபதியாக அன்ரன் பாலசிங்கம் லண்டனில் இருந்து சேவையாற்றுகிறார். இவரை பல நாட்டு ராஜதந்திரிகள் உட்பட நம்நாட்டு அதிகாரிகளும் சந்தித்து உரையாடுகிறார்கள். உலகின் முக்கியமான நாடுகளில் புலிகளின் தூதுவர் ஆலயங்களும் செயல்படத் தான் செய்கிறது. இலங்கையில் பிரதமர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வன்னியில் இருந்து செயல்படுகிறார். உதவிப் பிரதமர் மட்டக்களப்பில் இருந்து செயல்படுகிறார். சபாநாயகர் திருகோணமலையில் இருக்கிறார். இதைத் தவிர பத்து அமைச்சர்கள் வடகிழக்கு நிருவாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். இலங்கை அரசாங்க ஊழியர்களைத்தான் விடுதலைப் புலி அரசாங்கம் செயல்படுத்திக் கொண்டு வருகிறது. இதை முன் கூட்டியே அறிந்துதான் எதிர்க்கட்சித்தலைவர் ரணில்விக்கிரம சிங்கா தேர்தல் காலத்தில் வடகிழக்கில் புலிகளின் நிருவாகத் திற்கு ஒப்படைக்கப்படுமென்று குறிப்பிட்டது என்று ஆய்வாளர்கள் சொல்லுகிறார்கள்.

இவற்றுக்கு எல்லாம் ஆதாரமாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகரைக்கும், அம்பாறை மாவட்டத்திலுள்ள சங்கமான் கண்டிக்கும் பத்து வருடங்களுக்குப் பின்பு அரசாங்க அதிபர்கள் சென்றிருக்கிறார்கள் என்று சொல்லும் போது வடகிழக்கு ஒரு தனி அரசாங்கமாக இயங்குவது போல் இயங்குவதை ஊர்ஜிதப்படுத்துகிறது. இந்த விடுதலைப் புலிகளின் அரசாங்கத்தின் "செனட் சபை" போன்று இன்று வடகிழக்கின் மாகாண சபையும் செயல் பட்டு வருகிறது என்று சொல்லப் படுகிறது.

விடுதலைப் புலிகளின் அரசாங்கத்தில் தொலைத் தொடர்பு அமைச்சர் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய உள் நாட்டு வானொலி சேவைகளுடன் வெளிநாட்டுச் சேவைகளையும் ஆரம்பித்திருக்கிறார். இந்த வானொலிச் சேவைகள் வெற்றிகரமாக நடைபெறுகிறது என்பதை தினசரி செய்திகளின் போது படையினர் விடுதலைப் புலிகளின் வானொலிச் சேவையை இடைமறித்துக் கேட்ட செய்தி என்று சொல்லபடும்போது இவர்களிடத்திலுள்ள வெனொலி சேவையை அரசே உறுதிப்படுத்து கிறது என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

இப்படியான சூழ்நிலையிருக்கும் போது வடகிழக்கில் எப்படி குடிசன மதிப்பீடு நடை பெறும். இது பற்றி வடகிழக்கு மக்களுக்கு விடுதலைப் புலிகளும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் தெரிவிக்கப்படுகிறது. எப்படியும்அரசாங்கம் குடிசன மதிப்பீட்டை நடத்தி வடகிழக்கில் இப்போது சிங்கள மக்களின் தொகையையும் அவர்களின் வளங்களையும் காட்டுவதற்காகவே இத்தனை அவசரமாக கடன்பட்டு இந்த குடிசன மதிப்பீட்டு நாடகத்தை நடத்தப்போகிறது என்று சொல்லப் படுகிறது. இதனையும் பொறுத்திருந்து பார்க்கலாம்.

## ஆரையம்பதிக்கு நிதி ஒதுக்கீடு

(கணேசதாஸ்)

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதிக்கு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை தனது பண்முகப் படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒதுக்கியுள்ளார்.

ஆரையம்பதி மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.நீதிராஜன் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலை திருத்த வேலைகளுக்கென ஒரு லட்சம் ரூபாவும் ஆரையம்பதி விளையாட்டுக் கழகத்திற்கு இருபத்தையாயிரம் ரூபாவும், ஆரையம்பதி செல்வா நகர் கிழக்கிற்கு காளியம்மன் ஆலயத்திற்கு ஒலிபெருக்கி வாங்கவென முப்பத்தைந்தாயிரம் ரூபாயும் ஒதுக்கியுள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி எஸ். நீதிராஜன் தெரிவித்தார்.

# தொடர்ந்து நான் அரசுக்கு ஆதரவு வழங்குவேன்

**-பேரியல்-**



நேற்றிரவு தனியார் வானொலி ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் இனப்பிரச்சினை உட்பட முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதிதான். ஆகையால் அவருக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்கவிருக்கிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீமை அமைச்சரவையில் இருந்து நீக்கியமை தவறு என்பதாலேயே தாம் அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்ததாகவும் எனினும் தமது ராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி இன்னமும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் அப் பேட்டியில் பேரியல் அஷ்ரப் தெரிவித்தார்.

பேரியலுடன் யு.எல்.எம். மொகிடீன், ய்.எல்.எம்.ஹனிபா, விமலவீர திஸநாயக்க ஆகியோர் அரசுக்கு ஆதரவு வழங்குகின்றனர். பேரியல் மேலும் கூறுகையில், அமைச்சுப் பதவியை மீண்டும் பெற்றுக் கொள்வது எனது நோக்கமல்ல. ஜனாதிபதி மீது பூரண நம்பிக்கை கொண்டுள்ளேன்.

**ஜனாதிபதிக்கு நன்றி**

கிழக்கு மாகாணத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் முக்கிய அமைச்சுப் பொறுப்பொன்றினை ஜனாதிபதி என்னிடம் ஒப்படைத்திருந்தார். அதற்காக நான் ஜனாதிபதிக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

அபிவிருத்தி நடவடிக்கையில் கிழக்கு மாகாணம் பல ஆண்டுகள் பின் தங்கிக் காணப்படுகிறது. அங்கு கல்லோயாத் திட்டத்தைத் தவிர வேறு எந்தவொரு பாரிய திட்டமும் மேற்கொள்ளப்படவில்லை. மறைந்த எனது கணவர் அமைச்சர் அஷ்ரப் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்திருந்தார். அதேபோல் நானும் நீண்ட கால்த் திட்டமொன்றின் மூலமாக கிழக்கு மாகாணத்தை முழுமையாக அபிவிருத்தி செய்ய எண்ணியிருந்தேன்.

**கவிழ்க்க மாட்டேன்**

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு நான் ஆதரவளிக்க மாட்டேன். நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தி சுபீட்சமடையச் செய்வதே இன்றைய பிரதான தேவை. ஆட்சி பீடத்திலிருப்பவரை மாற்றி வேறொருவரை அமரச் செய்வது முக்கியமல்ல. இந்த விடயத்தில் பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். எமது நாட்டிற்கு சமாதானத்தை பிற நாட்டவர் வேறு தேசத்திலிருந்து கொண்டுவந்து தரப் போவதில்லை. நாமனைவரும் ''இலங்கையர்'' என்ற கோட்பாட்டில் சிந்தித்துச் செயற்பட வேண்டும். சமாதானத்தை ஏற்படுத்துவதில் பொதுமக்களுக்கே பெரும் பங்குண்டு. அரசியல் வாதிகள் உந்து சக்தியாகவே பணியாற்றுவர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஏழு உறுப்பினர்கள் எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்திருந்தாலும் இந்த நாட்டில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிக்கு எவ்வித இடையூறுகளும் ஏற்படுத்தாது ஆதரவளிப்பர்கள் என உறுதியாக நம்புகின்றேன். அதுவே எனது எதிர்பார்ப்பும் மறைந்த தலைவர் அஷ்ரபின் கனவுமாகும்.

**இனவாதச் சாயம் பூசுவது தவறு**

அம்பாறை கரையோர மாவட்டக் கோரிக்கை மிகவும் சாதாரணதொன்றாகும். அம்பாறை மாவட்டம் மிகப் பரந்த நிலப் பரப்பைக் கொண்டது. அங்கு மூவின மக்களும் வாழ்கின்றார்கள். அம்பாறை மாவட்டத்தின் நிருவாகம் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து முன்னர் பிரித்தெடுக்கப்பட்டது. தற்போது அம்மாவட்டத்தின் அனைத்து நிருவாக நடவடிக்கைகளும் அம்பாறை நகரை மையமாகக் கொண்டே செயற்படுத்தப்படுகிறது.

அரச அதிபர் மற்றும் நிருவாக உயரதிகாரிகள் அனைவரும் சிங்களவர்களாகக் காணப்படுவதால் தமிழ் மொழி பேசும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே தமிழ்-முஸ்லிம் மக்களது நலன் கருதி நிருவாகப் பங்கீடு நோக்காகவே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதனை தனி முஸ்லிம் இனச் சாயம் பூசுவது வேதனை தருகிறது என்றார்.

இந்நிகழ்ச்சியின் போது பேரியல் அஷ்ரபுடன் நேரடியாக தொலைபேசித் தொடர்பு கொண்ட பலர் அவரின் சிங்கள மொழித் திறனைப் பாராட்டினர்.

# கொட்டடியில் குடும்பஸ்தர் இனந் தெரியாதோரால் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம் கொட்டடி வில்லூன்றிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் புதன் கிழமை நள்ளிரவு இரத்தினம் கணேசலிங்கம் (45 வயது) என்பவர் தந்தை இனந்தெரியாதோரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவர் வீட்டிலிருந்தபோது அங்கு சென்ற இனந்தெரியாத இளைஞர்கள் இவரைச் சுட்டுக் கொன்றுவிட்டுச் சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவரின் கொலை தொடர்பான விசாரணை இன்று காலை யாழ். நீதிமன்றில் நடைபெற்றது. எதிர்வரும் 27.6.2001 முன்னர் புலன் விசாரணையை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் மு.திருநாவுக்கரசு பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதற்கிடையில் திருநெல்வேலியில் புதன்கிழமை மாலை பல்கலைக்கழகத்திற்குப் பின்பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து அப்பகுதி இன்று காலை படையினரால் சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

இத்தேடுதல் முற்பகல் 11 மணி முதல் 2 மணிவரை நடைபெற்றது.

இத்தேடுதலின்போது பலர் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இதில் பல்கலைக்கழக மாணவர்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இத்தேடுதலின்போது எவரும் கைது செய்யப்படவில்லை.

இத்தேடுதலின் போது நேற்று சம்பவம் நடந்த இடத்திலுள்ள கடை உரிமையாளரான கே.சிறி என்பவர் சிறிலங்கா படையினரால் கடுமையான தாக்குதலுக்கு உள்ளானார். கடைக்கு முன்னால் சம்பவம் இடம் பெற்றதால் இதற்கும் கடை உரிமையாளருக்கும் தொடர்புள்ளது என்றே படையினர் தாக்கியுள்ளனர்.

# அமைச்சர் பதிவியிலிருந்து ஹக்கீமை விலக்கியது ஏன்?

## ஜனாதிபதி விளக்கம்

'சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ஹக்கீம் பொதுசன ஐக்கிய முன்னணிக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய கருத்துக்களை ஊடகங்கள் மூலம் வெளியிட்டு வந்தார். அவை எமது கட்சி பற்றி தவறான கருத்துக்களையும், தோற்றப்பாட்டையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தக் கூடியனவாக இருந்தன. அவ்வாறு செய்ய வேண்டாமென நான் பல தடவைகள் ஹக்கீமிடம் கேட்டுக் கொண்டபோதிலும் அவர் அதற்கு அடிபணிய மறுத்துவிட்டார்.' இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க இன்று காலை பொதுசன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

**அஷ்ரப் நல்லவர்**

''எமது அரசாங்கம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரைப் பதவியிலிருந்து விலக்கியது ஏன் என்பதை நான் உங்கள் அனைவருக்கும் தெரியப்படுத்த வேண்டும். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் முன்னாள் தலைவர் அமரர் எம்.எச்.எம்.அஸ்ரப்புடன் சிறப்பாகப் பணியாற்றக் கூடிய சூழ்நிலை இருந்தது. பொதுசன ஐக்கிய முன்னணிக்குள் ஐக்கியத்தைப் பேணுவதன் அவசியம் பற்றி அவர் மிகவும் கரிசனை கொண்டவராகவே இருந்தார். ஆனால் ஹக்கீம் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை'' என்றும் ஜனாதிபதி குமாரதுங்க தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் 'உள்ளூராட்சித் தேர்தல்களில் மாற்றங்களை ஏற்படுத்த ஹக்கீம் இணங்கியிருந்தாலும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிப்பதற்கு ஒத்துழைக்க முடியாதெனக் கூறினார். 'ரவூப் ஹக்கீம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச்சேர்வது தொடர்பாக அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அது மாத்திரமல்லாது அந்த இரண்டு கட்சிகளுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்தும் ஆராய்ந்துவந்தார்.'

'பொதுசன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளையும் திசைதிருப்பி விடும் இத்தகைய நடவடிக்கைகளில் அவர் அண்மைக்காலமாக ஈடுபட்டு வந்துள்ளார். இதை எமது அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இவ்வாறான செய்கையில் ஈடுபடுபவரைத் தொடர்ந்து அமைச்சரவையிலும் வைத்திருக்க முடியாது'' என்று ஜனாதிபதி குமாரதுங்க தனது உரையில் தெரிவித்தார்.

இக்கூட்டத்தின்போது ரவூப் ஹக்கீமை அமைச்சர் பதவிலிருந்து விலக்கியதற்கு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையும் நிறைவேற்றப்பட்டது. இப்பிரேரணையை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி முன்மொழிந்தார். இதை அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.

# அப்துல் மஜீத்துக்கு பாராட்டு விழா

(சாய்ந்தமருது நிருபர் எம்.காசீம்.எம்.றபீக்)

சம்மாந்துறை தொகுதியின் முன்னால் பாராளுமன்ற உறுப்பினரும், அமைச்சரும், கிழக்கின் முதல் முஸ்லிம் பட்டதாரியுமான ஜனாப்.எம்.ஏ.அப்துல் மஜீத், (பி.ஏ) சம்மாந்துறை மக்களுக்கு ஆற்றிய பணிகளையும் பாராட்டி கௌரவிக்கவுள்ளனர்.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் சர்வ தேசிய கிழக்கின் மக்கள் சக்தி என்ற அமைப்பு மேற்கொண்டு வருவதாக அவ் அமைப்பின் தலைவர் ஓய்வுபெற்ற அதிபர் மாறன் யூ.செயின் தெரிவித்தார்.

# 'கிராம மக்களின் காலடியில் சேவை' கிராமிய வங்கியின் நோக்கம் அதுவே!

(கல்லாறு நிருபர்)

''நகரங்களில் உள்ளவர்கள் மட்டும் அனுபவித்து வந்த வங்கிச் சேவையை கிராமிய மக்களும் பயன்படுத்த வேண்டும் என்ற நல் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டதே கூட்டுறவு கிராமிய வங்கிச் சேவை. கிராம மக்களின் காலடியில் சேவை என்பதே அதன் நோக்கமாக இருந்தது...''

மேற்கண்டவாறு அண்மையில் நாவற்காடு நாமகள் வித்தியாலயத்தின் அதிபர் வே.கந்தவேல் தலைமையில் நடைபெற்ற செங்கதிர் சிறுவர் சேமிப்புத்திட்ட அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மட்டக்களப்பு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு) வி.பேரின்பம் தமதுரையில் குறிப்பிட்டார்.

ஈச்சந்தீவு கன்னன்குடா ப.நோ.கூ.சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மேற்படி வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்:

'கிராம மக்களின் காலடியில் சேவை' என்ற நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட எமது சேவை, செங்கதிர் சிறுவர் சேமிப்புத் திட்டம் என்ற வடிவில் உங்கள் பாடசாலையில் காலடிக்கே வந்திருக்கின்றது.

காலம் காத்திருப்பதில்லை. இளமையிற் கல்வி, சிலையில் எழுத்து. அதேபோல் நீங்கள் இளமையில் சேமிக்கும் நல்ல பழக்கத்தை இப்போதே ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் உங்கள் உயர் கல்வி இடையூறு இன்றி தொடருவதற்கான பொருளாதாரத்தை இந்த செங்கதிர் திட்டம் ஏற்படுத்திக் கொடுக்கவும். படிப்பு முடிந்ததும் சுயதொழில் ஆரம்பிப்பதற்குக்கூட இந்த சேமிப்பு உங்களுக்கு உறுதுணையாகும்'' என்று குறிப்பிட்டார்.

இவ் வைபவத்தில் மக்கள் வங்கி பிரதேச செயலகம் சார்பாக முகாமையாளர் க.ஆறுமுகம், சங்கத் தலைவர் எம்.சுந்தரலிங்கம், பொது முகாமையாளர் சீ.விநாயகமூர்த்தி, பிராந்திய கூட்டுறவு பரிசோதகர் கே.வி.தங்கவேலும் கலந்து கொண்டனர்.


**2ம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு 29 - 07 - 35



உதிர்வு 23 - 06 - 99

அமரர்

**கமிலஸ் இக்னேஷியஸ்**

''சாவின் இருள் சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்''

திருப்பாடல்(23:4)

என்றும் உங்கள் நினைவுடன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் மனைவி, மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள், சகோதரர்கள் உற்றார் உறவினர்கள்.

தகவல்
நிலானந் இக்னேஷியஸ்
84/1 சிறில் லேன்
மட்டக்களப்பு



**உங்கள் வீட்டுக்குத் தேவையான**

ஒட்டு மா, மூங்கில், நெல்லி, கொய்யா, பலா, விழி, அம்பரல்லா, தேக்கு மற்றும் அலங்கார மரங்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்:-

மன்று. சரவணா வீதி. இல.-19. கல்லடி. மட்டக்களப்பு.
தொலைபேசி இலக்கம்:- 22500

Advt

# ஆயிரம் படங்களுக்கு இசையமைத்த இசையமைப்பாளர் மகாதேவன் காலமானார்

**செ**ன்னை, ஜூன் 22- பழம்பெரும் இசை அமைப்பாளர் கே.வி.மகாதேவன் நேற்று சென்னையில் காலமானார். எம்.சரவணன், எஸ்.பி.பாலசுப்பிரமணியம், பி.சுசீலா இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

எம்.ஜி.ஆர், சிவாஜி இணைந்து நடித்த ஒரே படமான கூண்டுக்கிளி படத்திற்கு இசை அமைத்ததுடன், திருவிளையாடல், கந்தன் கருணை, தில்லானா மோகனாம்பாள், வானம் பாடி உள்பட தமிழ், தெலுங்கு மொழிகளில் ஆயிரம் படங்களுக்கு மேல் இசை அமைத்தவர் ப்ழம் பெரும் இசை அமைப் பாளர் கே.வி.மகாதேவன்.



மறைந்த கே.வி.மகாதேவன் ஜனாதிபதி சஞ்சீவரெட்டியிடம் தேசிய விருது பெற்ற காட்சி.

### காலமானார்

கடந்த சில வருடமாக அவர் பக்கவாத நோயால் பாதிக்கப் பட்டிருந்தார். சமீபகாலமாக அவரது உடல்நிலை மிகவும் மோசமானது. நேற்று காலை 9 மணி அளவில் அமைந்தகரையில் உள்ள அவரது வீட்டில் காலமானார். அவருக்கு வயது 83.

கே.வி.மகாதேவன் உடல் நேற்று அவரது வீட்டில் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப் பட்டிருந்தது. பட அதிபர் எம்.சரவணன், கே.பாலசந்தர், டி.எம். சவுந்தர்ராஜன், எம்.எஸ்.விஸ்வநாதன், வாலி, பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம், பாடகி பி.சுசீலா, வாணி ஜெயராம், எஸ்.பி. சைலஜா உள்பட ஏராளமான திரையுலக பிரமுகர்க்ள் நேரில் வந்து மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்கள். நேற்று மாலை அண்ணா நகரில் உள்ள சுடுகாட்டில் கே.வி.மகாதேவன் இறுதி சடங்கு நடந்தது.

## 1300 பேருக்கு இவ்வருடம் மரணதண்டனை ஜேர்மனி மாநாட்டில் தகவல்

**ம**ரணதண்டனை தொடர்பான முதலாவது உலக மாநாடு நேற்று முன்தினம் ஜேர்மனியில் டாஸ்பேக் நகரில் ஆரம்பமாகியுள்ளது.

ஐரோப்பிய மன்றத்தின் செயலாளர் நாயகம் பேட்டர் உரையாற்றும் போது குற்றச் செயல்களுக்கு எதிரான போராட்டத்தில் மரணத் தண்டனை முக்கிய காரணியானால் அமெரிக்காவின் தண்டனை முக்கிய காரணியானால் அமெரிக்காவின் குற்றச்செயல்களே இருக்காது என்று குறிப்பிட்டார்.

மாநாட்டில் உரையாற்றிய ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கடந்த பத்து நாட்களில் இருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றியதனை கடுமையாக கண்டித்தார்கள்.

இந்த வருடத்தில் மாத்திரம் 1300 பேருக்கு இந்த தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன என்று சுட்டிக்காட்டப்பட்டது.

72 நாடுகள் இன்னமும் மரண தண்டனையை விதிக்கின்றன. 77 நாடுகள் மரண தண்டனையை விலக்கியுள்ளன.

## உலக வலம்

தொகுப்பு :- பெள்ஸி

## ரஷ்யாவில் நாஸிகளின் ஆக்கிரமிப்பின் 60 ஆண்டு நிறைவு

(மாஸ்கோ)

**ர**ஷ்ய மக்கள் நேற்று நாஸிகளின் ஆக்கிரமிப்பின் 60 ஆண்டு நிறைவை அனுஷ்டித்தனர். ரஷ்யாவிலும் முன்னைய சோவியத் யூனியனிலும் இன்னமும் உயிருடன் இருக்கும் இரண்டாவது உலக மகாயுத்த முது பெரும் வீரர்கள் விராருஸ் நகரில் கூடினார்கள்.

அதே சமயம் சென் பீட்டஸ் நகரில் சண்டையின் போது கொல்லப்பட்ட 800 படை வீரர்களின் உடல் பாகங்கள் கண்டு பிடிக்கப்பட்டு நேற்று அடக்கம் செய்யப்பட்டன.

ஹிட்லர் சோவியத் யூனியன் மீது ஆக்கிரமிப்பை ஆரம்பித்து 60 ஆண்டுகளின் பின்னர் இந்த உடல் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

நாசிகளுடனான போரின் போது சென் பீட்டஸ் நகரில் 6இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். அத்துடன் 10 இலட்சம் பேர் காணாமல் போனார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## வட அயர்லாந்து தலைநகர் பெல்பெஸ்டில் வன்முறை

(பெல்பெஸ்ட்)

**வ**ட அயர்லாந்து தலைநகரான பெல்பெஸ்டில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற வன்முறைகளை அடக்க முயன்ற பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்றாவது இரவாக நடை பெற்ற வன்முறைகள் தொடர்ந்தது 12 பொலிஸார் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை வன்முறைகளை கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸார் இறப்பர் குண்டுப் பிரயோகம் மேற்கொண்டனர். கடந்த மூன்று இரவுகளில் நடை பெற்ற மோதல்களில் 30க்கும் மேற்பட்ட பொலிஸார் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆலயச் செய்திகள்

## உகந்தைமலை ஸ்ரீ முருகன் ஆலய எண்ணெய் காப்பு சாத்தும் வைபவம் ஜூன் 26

(கல்லாறு நிருபர்)

**உ**கந்தைமலை ஸ்ரீமுருகன் தேவஸ்தான புனரார்த்தன நூதனப் பிரதிஷ்டா அஷ்ட பந்தன பஞ்ச குண்டபஷ மஹா கும்பாபிஷேக நிகழ்வுகள் இன்று ஆரம்பமாகின்றது. அன்று கிரியாரம்பமும் ஹோமம், திசா ஹோமம் என்பனவும், 24 யந்திர பூசையும், 25 தூபிஸ்தாபனம், கோவாசகம், நூதன மூர்த்திகள் தான்யாதி வாசம், ஜலாதிவாசம் நயனே வன் மீலாமை சயனா நோபனம் யந்திரபூசை பஞ்ச குண்ட அக்கினி விபஜனமும், ஹோமங்கள், விசேட தீபாரதனை, வேத ஸ்நேத்திர திருமறை பிரயாணம், விபூதிப் பிரசாரம் என்பனவும் இடம் பெறும்.

26ஆந் திகதி பக்தர்களின் அதி முக்கிய வைபவமான எண்ணெய்க்காப்பு சாத்துதல் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறுவதற்கு ஆலய நிருவாகம் ஒழுங்கு செய்துள்ளது. 27ஆந் திகதி பிரதான கும்பங்கள் வீதி வலம் வருதலும், காலை 11.30க்கு முருகப்பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகமும், மாலையில் திருக்கல்யாணம், ஊஞ்சல், விதியுலா என்பனவும் இடம் பெறும்.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து ஜீலை 19 வரை மண்டலாபிஷேகமும், ஜீலை 20 வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி ஓகஸ்ட் 4ஆந் திகதி தீர்த்தோற்சவம் நடைபெறும். மறு நாள் தொடக்கம் விசேட பூஜை நடை பெற்று முடிவில் சங்காபிஷேகம் நடைபெறும்.

## அலங்கார உற்சவம்

(ச.மயூரவதனன்)

**வ**வுனியா தோணிக்கல் அருள்மிகு விசாலாட்சி சமேத விஸ்வநாதன் திருக்கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் 19-06-2001 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 29-06-2001 வெள்ளிக் கிழமையுடன் நிறைவடைய வுள்ளது.

உற்சவ காலத்தில் காலை 10.00 மணிக்கு நவகலச அபிஷேகமும் விசேட பூசையும், மாலை 6.00 மணிக்கு பூஜையைத் தொடர்ந்து பஜனை. 7.00 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் நடை பெற்று எம் பெருமான் திருவீதியுலா வந்து அருள்காட்சி கொடுப்பார்.

ஆலய உற்சவ பிரதம குரு சிவதத்துவ கிரியாஜோத், சிவஸ்ரீ முத்து ஜெயந்தி நாதக் குருக்கள் நிகழ்த்துவார். ஆலய குரு அ.வாசுதேவசர்மா

## கும்பாபிஷேகம்

(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாணிக்கப் பிள்ளையார் ஆலய பூனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் 11-11-2001 இல் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அம்பாறை நகரில் உள்ள இப்பிள்ளையார் ஆலயம் பழமை வாய்ந்தது. 1990 வன்முறையில் சேதமான இவ் ஆலயம் மாவட்ட தமிழ் பிரமுகர்களின் முயற்சியினால் மீளக்கட்டமைக்கப்பட்டு வருகிறது. பொறியியலாளர் ரி.கருணைநாதன் தலைமையிலான ஆலய சபையினர் கும்பாபிஷேக ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

## பொங்கல் விழா

(ச.மயூரவதனன்)

**வ**வுனியா பூந்தோட்டம் ஸ்ரீ லக்ஷ்மி சமேத நரசிங்க ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று இடம் பெறவுள்ளது. சென்ற ஆண்டு அதிகமான மக்கள் கலந்து கொண்டார்கள்.

ஒரே ஒரு நாளே இடம் பெறும் இந்த பொங்கல் விழாவுக்கு வவுனியாவில் உள்ள அனைவரும் படை திரண்டு சென்று நரசிங்க பெருமானின் அருளை பெறுவது வழக்கமாகவுள்ளது.

இவ் விழாவை முன்னிட்டு ஆலய நிருவாகம் விசேட மோளக்கச்சேரி, வில்லுப்பாட்டு, நாடகம் போன்ற, கலை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளதுடன் விசேட அதிர்ஷ்ட் இலாப சீட்டிழுப்பும் நடைபெறவுள்ளது.

## இந்து ஆலய ஒன்றிய மாதாந்த கூட்டம்

**மே**ற்படி ஒன்றியத்தின் மாதாந்த கூட்டம் எதிர்வரும் 27-06-2001ம் திகதி புதன் கிழமை மு.பகல் 10.00 மணியளவில் ஒன்றியத்தின் தலைவர் இ.இராசேந்திரன் தலைமையில் சின்னவத்தை, கல்வட்டைப்பிள்ளையார் கோவில் மண்டபத்தில் நடைபெறும். போரதீவுப்பற்று இந்து ஆலய நிருவாகத்தினர் அனைவரும் தவறாது சமூகம் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

## பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம்

(சந்துரு)

**அ**ருள் வளம் பொழிந்து பன்னெடுங்காலமாக ஏறாவூர் நகரில் அமைந்துள்ள ஸ்ரீ பத்திர காளி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 27-06-2001(புதன்கிழமை) அன்று மடை எடுக்கும் வைபவத்துடன் ஆரம்பமாகி 08-06-2001(ஞாயிற்றுக் கிழமை) தீ மிதிப்பு வைபவத்துடன் இனிதே நிறைவு பெறும்.

கிரியா நிகழ்வுகள் யாவும் ஆலய பிரதம குருமார்களான பூசகர் நா.ஜீவன், கு.வாமதேவன் ஆகியோரின் தலைமையில் இடம் பெறுகின்றது.

இறுதி நாள் அன்று ஆலய அன்னதான சபையினரால் அன்னதானம் வழங்கப்படுகிறது. அடியார்களின் நலன் கருதி விசேட போக்குவரத்து சேவையும் நடைபெறவுள்ளது.



**ஆரையம்பதி, வம்மிக்கேணி அருள் மிகு ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 28ம் திகதி திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 5 நாட்கள் விசேட பூசைகள் இடம்பெற்று ஜூலை மாதம் 4ம் திகதி இரவு 10 மணிக்கு விநாயகப்பானை எழுந்தருளப்பண்ணும் வைபவமும் தொடர்ந்து சக்கரை அமுது பூசையும் நடைபெற்று அம்மனின் திருக்குளிர்த்தி வைபவமும் இடம் பெற்று மறுநாள் அதிகாலை அம்மன் சமுத்திர தீர்த்தோற்சவத்துடன் இனிதே நிறைவு பெறும்.**

**(படமும் தகவலும்:- ச.கணேசதாஸ்)**

# தினக்கதிர் ஆசான்

க.பொ.த.(உ-த்) பரீட்சை - 2001

## அளவையியலும் விஞ்ஞானமுறையும்

## மாதிரி வினாத்தாள்

01. (அ). எடுப்பு முரண்பாட்டை கருத்திற் கொண்டு முதலாவது எடுப்புக்கு பொருத்தமான இரண்டாவது எடுப்பை வெற்றிடத்தில் எழுதுக

1. எல்லா மலர்களும் அழகானவை. என்பது உண்மையாயின்----------------------- என்பது உண்மையாகும்.
2. மனிதர்கள் அனைவரும் நேர்மையானவர்கள் என்பது பொய்யாயின்----------------------------------என்பது உண்மையாகும்
3. சில தவளைகள் நீந்துவன என்பது உண்மை அல்லவாயின்------------------------என்பது பொய்யாகும்.
4. எந்த பாம்பும் விசமுடையவை அல்ல என்பது பொய்யாயின்-------------------என்பது சந்தேகமாகும்.

(ஆ). எடுப்பு முரண்பாடுகளுள் ``பூரண முரண்பாடு'' எதிர்மறை முரண்பாடே ஆகும். இக்கூற்றினை விளக்குக.

02. (அ). மறுமாற்றம், எதிர்மாற்றம், எதிர்வைக்கை என்பவற்றை பயன்படுத்தி கீழ்வரும் வாதங்கள் வலிதானவையோ அல்லவோ எனத் துணிக.

1. எல்லா பறவைகளும் பறப்பவை ஆகும். ஆகவே பறப்பவை அல்லாத எதுவும் பறவைகள் அல்ல.
2. வணிகர்கள் அல்லாத சிலர் நேர்மை இல்லாதவர்கள் அல்ல ஏனெனில் எந்த வணிகர்களும் நேர்மையானவர்கள் அல்லர்.
3. சில ஆய்வாளர்கள் புத்திசாலிகள். எனவே புத்திசாலிகள் அனைவரும் ஆய்வாளர்கள் அல்லர் ஆகும்.
4. பல ஆண்கள் அழகு அல்லாதவர்கள் அல்லர். ஆகவே அழகானவர்கள் சிலர் ஆண்களாவர்.

(ஆ). மறுமாற்ற விதிகளை கூறுக?

03.(அ). பின்வரும் நியாயத் தொடைகள் வலிதானவையோ வலிதற்றவையோ என்பதை துணிக. நியாயத் தொடை வலிதற்றதெனில் மீறப்பட்டுள்ள விதியை/விதிகளைக் கூறி இடம் பெற்றுள்ள போலியையும் விளக்குக.

1. விலங்குகள் மாடுகள் என்பது மாடுகள் அனைத்தும் புல் தின்னும் என்பதோடு விலங்குகளும் அவ்வாறே எனின் பெறப்படும்.
2. முயல்கள் மிருகங்கள் ஆகும் மிருகங்கள் பிராணிகள் ஆகும். ஆகவே மிருகங்கள் முயல்கள் ஆகும்.
3. பாலூட்டிகளாக மிருகங்களும் அது போல பறவைகளும் உள்ளன. எனவே பறவைகள் சில மிருகங்களாகும்.
4. திமிங்கிலம் எதுவும் நீந்துவன அல்ல ஏனெனில் மீன்கள் எவையும் திமிங்கலம் அல்ல என்பதுடன் நீந்துவன எதுவும் மீன்கள் அல்ல.

(ஆ). நியாயத் தொடை அமைப்பில் பொய்யான எடு கூற்றுக்களையும் பொய்யான முடிவுக் கூற்றினையும் கொண்ட ஓர் வலிதற்ற வாதம் ஒன்று தருக.

04.(அ). பின்வரும் வாதங்களை வகுப்படிப்படையில் குறியீட்டில் அமைத்து அவை வலிதானவையா வலிதற்றவையா என்பதை வெண்வரிப்படத்தின் மூலம் துணிக.

1. காகங்கள் கறுப்பு நிறம் சில காகங்கள் வெள்ளை நிறம் ஆகவே வெள்ளை நிறம். சில கறுப்பு நிறமாகும்.
2. மலர்களும் மனிதர்களும் அழகானவை. ஆகவே மனிதர்கள் மலர்களாவர்.
3. எந்த விஞ்ஞானிகளும் தத்துவஞானிகள் அல்ல, அரிஸ்ரோட்டில் விஞ்ஞானி அல்ல ஆகவே அரிஸ்ரோட்டில் தத்துவஞானி.
4. ஜப்பானும் அமெரிக்காவும் நாடுகள் ஆகும். ஆகவே நாடுகள் அபிவிருத்தி அடைந்துள்ளன.

(ஆ). பின்வருவனவற்றை விளக்குக.

1. இணையாத வகுப்பு
2. முடிவுள்ள தொடை

### பகுதி11

05.(அ).

1.$\sim(P \wedge Q)$ 2.$\sim[P \vee (Q \rightarrow P)]$

என்பவற்றுக்கு அளவையியல் ரீதியில் சமமான ஓர் பெறுமானத்தினை கூறி அவை சமமானவை என நிறுவிக் காட்டுக.

(ஆ). உண்மை அட்டவணையினை பயன்படுத்தி கீழ்வரும் சோடிகள் ஒன்றுக்கு ஒன்று சமமானவையா, முரணானவையா அல்லது சமனோ முரனோ அல்லாதவை என்பதைத் துணிக.

1.$[(P\ Q) \rightarrow R];[P \rightarrow (Q \rightarrow R)]$
2.$[P \rightarrow (Q \vee P)];[(Q \vee P) \rightarrow \sim P]$

(இ).Pஐ உண்மை எனக் கொண்டு பின்வரும் குறியீட்டு வாக்கியங்கள் உண்மையோ பொய்யோ அல்லது தீர்மானிக்க முடியாதோ என்பதை உண்மை அட்டவணையை பயன்படுத்தாது துணிக. உமது விடையின் முக்கியமான படிமுறைகளை மட்டும் தருக.

1.$(P \vee Q) \vee (Q \wedge P)$
2.$(P \wedge Q) \wedge (\sim Q \wedge P)$
3.$(P \wedge Q) \vee (P \rightarrow Q)$
4.$\sim(P \vee Q) \rightarrow (R \wedge \sim P)$

06. (அ). பின்வரும் வாதங்களைக் குறியீட்டில் அமைத்து அவை வலிதானவையோ அல்லவோ என உண்மை அட்டவணையின் நேரல் முறை மூலம் துணிக. உமது சுருக்க திட்டத்தையும் தருக.

1. உரிமைகள் பறிக்கப்படுமாயின் ஆயினே போராடுதல் வேண்டும். உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளதாயின் என்பதுடன் நீதிகோரவும் அனுமதிக்கப்படவில்லை. போராடுதல் கூடாது அல்லது நீதி கோர அனுமதிக்கப் பட்டுள்ளது என்பது பொய்யாகும். ஆகவே உரிமைகள் பறிக்கப்படவில்லை என்பது தவறு இல்லை.
2. பேச்சுவார்த்தை அல்லது இராணுவ நடவடிக்கை இடம்பெறும்; ஆயின் காலம் நீண்டிக்கப்படுவதுடன் பிரச்சினை தீரமாட்டாது. இராணுவ நடவடிக்கை இடம்பெறாது பிரச்சினை தீரும் எனின் ஆகவே பேச்சுவார்த்தை இடம் பெறுமாயினே இராணுவ நடவடிக்கை இடம்பெறும்.
3. நாட்டில் போர் நிகழுகிறது அமைதி ஏற்படாது. நாட்டில் போர் நிகழுகிறது என்பதுடன் அழிவு இடம்பெறுகிறது மக்கள் இடம்பெயருவர் ஆயினே, ஆகவே மக்கள் இடம்பெயருவர் நாட்டில் போர் நிகழும் என்றிருந்தால் ஒழிய.

(ஆ). உண்மை அட்டவணையின் நேரல் முறையினை பயன்படுத்திக் கீழ்வரும் பிரச்சினையை தீர்க்கவும்.

1. ஒரு மாணவனை X,Y,Z எனும் மூன்று ஆசிரியர்கள் பரிசோதித்த போது மாணவனின் நிலை பற்றி பின்வரும் கூற்றுக்கள் தெரிவித்தனர்.

X:- மாணவன் பரீட்சையில் சித்தியடைவான் ஆயின் தொழில் பெறுவான். அல்லது பல்கலைக் கழகம் செல்வான்.

Y:-மாணவன் தொழில் பெற மாட்டான்.

Z:-மாணவன் பரீட்சையில் சித்தியடைவான்.

மூன்று ஆசிரியர்களினது கூற்றுக்களும் உண்மையாயின் மாணவன் பல்கலைக்கழகம் செல்வான் என எடுக்கப்பட்ட முடிவு சரியாகுமா?

07. பின்வரும் வாதங்களைக் குறியீட்டில் அமைத்து எடுகூற்றுக்களில் இருந்து முடிவைப் பெறுவதன் மூலம் அவை வலிதானவை என எடுத்துக் காட்டுக. ஒவ்வொரு வாதத்தினதும் குறியீட்டாக்கத்திற்கு நீர் பயன்படுத்திய சுருக்கத்திட்டத்தையும் தருக.

1. மாணவர்கள் இறுக்கிப் படிப்பார்களாயின் பரீட்சையில் சித்தியடைவதுடன் பல்கலைக்கழகம் செல்வார்கள். மாணவர்கள் இறுக்கி படிக்கிறார்கள் என்பதுடன் கடின முயற்சியில் ஈடுபடுகிறார்கள். ஆகவே மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வார்கள்.
2. சிறுவர்கள் பாடசாலைக்கு செல்வார்களாயின் நல்ல அறிவை பெறுவார்கள். நல்ல அறிவை பெறுவார்கள் எனின் சமூகத்தில் மதிக்கப்படுவர். சமூகத்தில் மதிக்கப்படுகிறார்கள் எனின் சிறுவர்கள் பாடசாலைக்கு செல்லவில்லை ஆகவே சிறுவர்கள் பாடசாலைக்கு செல்லவில்லை.
3. பொருளாதாரம் வளமாயிருக்கிறது அல்லது வளங்கள் பயன்படுத்தப்படுகிறது. வளங்கள் பயன்படுத்தப்படுமாயின் பொருளாதாரம் வளர்ச்சியடையும். பொருளாதாரம் வளர்ச்சியடைகிறது எனின் நாடு முன்னேறும் ஆகவே பொருளாதாரம் வளமாயிருக்கவில்லை ஆயின் நாடு முன்னேறும்.
4. வறியவர்கள் ஆயின் அதிகமாக உழைப்பதுடன் குறைந்த வருமானம் பெறுவர். அதிகமாக செலவிடுவார்கள் எனின் அதிகமாக உழைப்பதுடன் குறைந்த வருமானம் பெறுவர். வறியவர் என்பதுடன் அதிகமாக செலவிடுவார்கள் என்பது பொய். வறியவர்கள் அல்லது அதிகமாக செலவிடுவார்கள் ஆகவே குறைந்த வருமானம் பெறுவார்கள் என்பது பொய் அல்ல.

08. (அ). தேற்றம் என்றால் என்ன?

(ஆ). தேற்றத்தின் மூன்று பயன்பாடுகளை தருக?

(இ). பின்வரும் தேற்றங்களை பெறுகை முறை மூலம் நிறுவிக் காட்டுக.

1.$[P \rightarrow (Q \rightarrow R)] \rightarrow [Q \rightarrow (P \rightarrow R)]$
2.$\sim(P \rightarrow Q) \rightarrow P$
3.$(P \vee \sim P)$

### பகுதி 111

09. பின்வருவனவற்றுள் ஏதேனும் நான்கிற்கு சுருக்க குறிப்புக்கள் தருக.

1. இருதலைக்கொள்ளி
2. நியாயமாலை
3. குறை நியாயத்தொடை
4. உருக்களும் பிரகாரங்களும்
5. சுவார்த்தனுமானமும் பாராத்த அனுமானமும்

10. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள போலிகளை இனம் கண்டு அவை இடம் பெற்றுள்ள விதத்தினை விளக்குக.

1. டார்வினின் பரிமாணக் கொள்கையை ஏற்கக் கூடாது ஏனெனில் அது நம் முன்னோர்கள் குரங்கின் வழியாக வந்தவர்கள் எனக் கூறுகின்றது.
2. ஒரு மனிதனது எந்தப் பகுதியைச் சோதித்தாலும் அதில் மனம் இல்லை எனக் காண்பீர்கள் ஆகவே மனிதருக்கு மனம் என்பதில்லை என்பது தெளிவு.
3. எனக்கு நினைவுள்ளவரை ஒவ்வொருநாளும் நான் கொஞ்சம் கொத்தமல்லி உட்கொண்டு வந்திருக்கிறேன். எனக்கு ஒரு போதும் ஆஸ்துமாவினால் தொல்லை ஏற்படவில்லை. நீயும் ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொத்தமல்லி எடுக்க வேண்டும் என்பது எனது புத்திமதி. ஆஸ்துமா பறந்து போகும்.
4. உலகில் வேறு எந்த நாட்டையும் விட இலங்கையில் தான் அதிகளவான வாகனச்சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள் உள்ளன. அதிக அளவிலான வீதி விபத்துக்கள் நடப்பதும் வேறு எந்த நாட்டையும் விட இலங்கையில் தான். ஆகவே வீதி விபத்துக்களை அகற்ற வேண்டுமாயின் வாகனச் சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளை நாம் மூடிவிட வேண்டும்.

11.(அ). நியமில் போலிகளுக்கும் நியமப்போலிகளுக்கும் இடையிலான வேறுபாட்டை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.

(ஆ). பின்வரும் போலிகளுக்கு இவ்விரண்டு உதாரணங்கள் தருக.

1. தடத்தல் போலி
2. பிரிப்புப் போலி

(இ). பின்வரும் இரு போலிகளையும் விளக்குக

1. கௌரவநியாய போலி
2. ஆள்நியாயப்போலி

12. பின்வருவனவற்றுக்கு சிறு குறிப்பு வரைக.

1. சமச்சீர் அற்ற தொடர்பு
2. எடுப்புக்களும் வாக்கியங்களும்
3. வாய்ப்பும் உண்மையும்
4. சிந்தனை விதிகள்
5. பதங்களின் வியாப்தி

ஆசான்:- இ.மோகன்

## பட்டிருப்பு கல்வி வலய மட்ட தமிழ்த் தினப் போட்டி முடிவுகள்

அண்மையில் பட்டிருப்பு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழி தினப் போட்டிகள் மட்/களுவாஞ்சிகுடி ம.ம.வித்தியாலயத்தில் இரண்டு நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. அவற்றின் முடிவுகள் பின்வருமாறு:-

வாசிப்பு (பிரவு1)நிலை1 க.சர்மதா(களுதாவளை புலவர் மணி வித்), நிலை - 2 வி.கஜனியா(திருப்பழுகாமம் வி.வித்), நிலை - 3 க.கிருஷினி(முதலைக்குடா ம.வி), வாசிப்பு(பிரிவு 2) நிலை - 1 த.கோபிகா(தேற்றாத்தீவு ம.வி), நிலை - 2 செ.மைதிலி(பெரிய போரதீவு பா.வித்), நிலை - 3 த.ஜெமஸ்கரன்(அரசடித்தீவு வி.வித்)

ஆக்கத்திறன் வெளிப்பாடு (கதை கூறல்) (பிரிவு -1) நிலை - 1 ச.சித்தார்த்தன்(களுதாவளை ம.வி.), நிலை - 2 சி.கிசாலினி(மண்டூர் இ.கி.மி.வித்), ஆக்கம் எழுத்து (பிரிவு - 1) நிலை - 1 து.சுபாநந்தி(முனைத்தீவு ச.ம.வித்), நிலை - 2 இ.நிமித்தா(உதயபுரம் த.வித்), நிலை - 3 ச.கோபிதா (மகிழடித்தீவு ச.வித்), ஆக்கம் எழுத்து (பிரிவு - 2) நிலை - 1 சு.பிரியந்தி(பெரிய கல்லாறு ம.கல்லூரி), நிலை - 2 யோ.மனோரமணி(அம்பிளாந்துறை க.ம.வி.) நிலை - 3 க.நிரோசினி(பழுகாமம் கண்டுமணி ம.வி)

கட்டுரை(பிரிவு 3) நிலை - 1ஆ.டினேஸ்(ஓந்தாச்சிமடம் விநாயகர் வித்), நிலை - 2 சு.வதநிஜா(தம்பலவத்தை க.வித்), நிலை - 3 கு.உமாரமணன்(அம்பிளாந்துறை க.ம.வித்.), கட்டுரை (பிரிவு 4) நிலை - 1 சி.அகிலா (மண்டூர் இ.கி.மி.வித்), நிலை - 2 நா.சுபாஜினி(முதலைக்குடா ம.வி), நிலை - 3 த.வனிதா(களுதாவளை ம.வி), கட்டுரை (பிரிவு 5) நிலை - 1 க.நிறோஜினி(மண்டூர் ம.வி), நிலை - 2 பா.ஜெயராணி(பட்டிருப்பு ம.ம.வித்), நிலை - 3 சி.ஜீவரதி (அரசடித்தீவு வி.வித்), குறுநாடகம்(தி.போ) நிலை - 1 பூ.புனிதகரன்(குருமன்வெளி சிவசக்தி வித்), நிலை 2 த.சேரலாதன் (கோவில் போரதீவு வி.ம.வித்)

கவிதை ஆக்கம் (பிரிவு 4) நிலை - 1 மை.அஜித் பிரசாத் (பெரிய கல்லாறு மத்திய கல்லூரி), நிலை - 2 அ.திலகா(பெரிய போரதீவு பா.வித்), நிலை - 3 பொ.ஜசிதா(முதலைக்குடா ம.வி), கவிதை ஆக்கம் (பிரிவு 5) நிலை - 1 ஸ்ரீராம் புவனராச சர்மா (குருமன்வெளி சி.ம.வி), நிலை 2 தி.திருமகள்(மண்டூர் ம.வி), நிலை - 3 யோ.கமலராசா(அரசடித்தீவு வி.வித்), சிறுகதை ஆக்கம்(பிரிவு 4) நிலை - 1 க.மோகனதாஷன்(மாங்காடு ச.வித்), நிலை - 2 அ.சுமிதா(மண்டூர் இ.கி.மி.வித்), நிலை - 3 மு.இராஜேந்திரன் (மகிழடித்தீவு ச.வித்), சிறுகதை ஆக்கம்(பிரிவு 5) நிலை - 1 செ.கோகுலசிங்கம்(செட்டிபாளையம் ம.வி.) நிலை - 2 தி.தயாழினி (முனைத்தீவு ச.ம.வி) நிலை - 3 ம.குணலெட்சுமி(அம்பிளாந்துறை க.ம.வி.)

(நாளை தொடரும்)

# தாய்மாரின் அக்கறை இருந்தாலே பிள்ளைகளின் வளர்ச்சி அதிகரிக்கும்

(மருதமுனை ஹரீஷா)

தாய்மார்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளின் வளர்ச்சியில் கூடுதலான அக்கறையைச் செலுத்துவதன் மூலம் தான் நீங்கள் எதிர்பார்க்கின்ற பயன்களை உங்கள் பிள்ளைகள் பெறமுடியும் என்பதை ஒவ்வொரு தாயும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

இவ்வாறு மருதமுனை டெக்லாங் நிறுவனத்தின் ஆங்கில பாலர் பாடசாலை சிறார்களின் இல்ல விளையாட்டுப்போட்டி மருதமுனை மகுர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய சம்மாந்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.எல்.ஜமால்தீன் ஜே.பி.கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

இங்கு நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றிய சின்னஞ் சிறார்கள் அவர்கள் அடைய வேண்டிய இலக்கை சரியாக அடைய வேண்டும் என்பதற்காக கயிறுகளால் அடையாளமிடப் பட்டிருந்தது. இந்த அடையாளத்தின் மூலம் தான் செல்ல வேண்டிய பாதையில் ஒழுங்காகச் செல்வதற்கும் மற்றவரின் பாதையை குறுக்கறுக்காமல் இருப்பதற்கும் தன் பாதையில் சென்று தனது இலக்கை அடைவதற்கும் ஒழுங்காகப் பயிற்சியளிக்கப்பட்டிருக்கிறது இந்தப் பயிற்சி சிறார்களின் எதிர்காலத்திற்கு ஒரு முன் மாதிரியாகும்.

இந்தப் பாடசாலையினுடைய மாணவர்கள் எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக இந்த நாட்டிலே வாழ்வதற்கு வழி சமைத்திருக்கின்றது என்பது நாம் எல்லோருக்கும் இந்தப் பாடசாலை உணர்த்துகின்றது.

எனவே எமது கிராமத்திலே இருக்கின்ற இப்பாடசாலையை முன்னேற்றுவதற்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார். டெக்லாங் நிறுவனத்தின் தலைவர் முன்னாள் பீடாதிபதி ஏ.ஆர்.ஏ. அஸீஸ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. சிறப்பு அதிதிகளாக எம்.ஜே.எம்.ஜ.'.பர், எஸ்.நஜீம், எஸ்.எம்.சகாப்தீன், சட்டத்தரணி எம்.எஸ்.எம்.ஜெமீல் ஆகியோரும் கலந்து கொண்டனர். பி.எம்.முபாறக் நன்றியுரையாற்றினார்.

# கட்டுமுறிவு அணைக்கட்டை உலக வங்கி பிரதிநிதிகள் பார்வையிட்டனர்

(அரியம்)

வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கட்டுமுறிவுக்குளத்தினை நேரடியாக பார்வையிட்ட உலக வங்கித் தூதுக்குழுவினர் அங்கு நியாப் திட்டத்தின் கீழ் பயனடையவுள்ள குடும்பங்களுடன் உரையாடி எதிர்கால முன்னேற்றம் தொடர்பாக கேட்டறிந்ததுடன் ஆலோசனைகளையும் வழங்கினர்.

அண்மையில் சென்ற இக்குழுவினருடன் கட்டு முறிவு குளத்தின் செயல் திட்ட வேலைகளில் பங்கெடுத்துக் கொண்ட ஆண், பெண் உறுப்பினர்களை தனித் தனியாக அவர்களின் பிரச்சினை தொடர்பாக கேட்டறிந்து சென்றுள்ளனர்.

தற்போது கட்டுமுறிவு அணைக்கட்டு புனரமைக்கப் படுவதுடன், வீதி புனரமைப்பு, குடிநீர் கிணறுகள் அமைத்தல், மீன்பிடி உபகரணங்களை பெற்றுக் கொடுத்தல், கால் நடை வளர்ப்பை ஊக்குவித்தல், தென்னைச் செய்கை நடைமுறைப் படுத்தல் ஆகிய கருத்திட்டங்களை கட்டு முறிவுப்பகுதியில் நடைமுறைப்படுத்தவுள்ளதாக அறியமுடிகிறது.

கட்டு முறிவு நியாப் திட்டம் தொடர்பாக உலக வங்கிப் பிரதி நிதிகளுடன் மாவட்ட அரச அதிபர் சரீம் நிறுவன பிரதிநிதிகள் உட்பட பலரும் சென்றிருந்தனர்.

# விபத்தில் பலி

(காரைதீவு நிருபர்)

கல்முனையைச் சேர்ந்த தங்கவேல் கருணாரெட்ண(வயது 31) எனும் இளைஞர் லொறி விபத்தில் பலியானார்.

மூதூரிலிருந்து அரிசி லொறியொன்றை செலுத்தி வந்து கொண்டிருந்த கருணா என்பவர் லொறி குடைசாயப் போகிறது என்றெண்ணி பாய்ந்திருக்கிறார்.

அவர் மேலே லொறி குடைசாய ஸ்தலத்திலேயே அவர் மரணமானார். அவரது சொந்த லொறி அது. கல்முனை விளையாட்டு கழகத்தில் சிறந்த விளையாட்டு வீரனான கருணா ஒரு வர்த்தகருமாவார் கல்முனையில் வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப் பட்டுள்ளன.

# ஏறாவூர் தமிழ் வித்தியாலயம் புறக்கணிப்பு என பிரசுரம்

(அரியம்)

வலயமட்ட தமிழ்தினப் போட்டியில் ஏறாவூர் தமிழ் வித்தியாலயம் புறக்கணிக்கப்பட்டதாக கூறும் துண்டுப்பிரசுரம் ஒன்று நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

'குமுறும் உள்ளங்கள்' எனும் பெயரில் வெளியான அத்துண்டுப்பிரசுரத்தில் இவ்வாண்டுக்கான தமிழ்த்தின நாடகப் போட்டியில் கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற ஏறாவூர் தமிழ் மகாவித்தியாலயம் வலய மட்டப் போட்டியில் புறக்கணிக்கப்பட்டது ஏன் என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

கல்வி அதிகாரிகளின் அசமந்தப் போக்கின் காரணமாகவே ஏறாவூர் தமிழ் வித்தியாலய மாணவர்கள் ஓரம் கட்டப் பட்டனர் எனவும் இது விடயத்தில் மேலதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் எனவும் அத்துண்டுப் பிரசுரத்தில் எழுதப்பட்டுள்ளது.



சமீபத்தில் அனுஷ்டிக்கப்பட்ட தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் மேற்கொள்ளப்பட்ட சிரமதானத்தின் போது பொதுச் சுகாதார பரிசோதகரான. நியாஸ்.எம்.அப்பாஸ், எம்.என்.எம்.பைலான், பிரதி அதிபர், ஏ.ஆர்.எம். தௌபீக், ஆசிரியர்களான எம்.எஸ். ஜிதாறுதீன், எம்.எம்.றாஜி ஆகியோர் காணப்படுகின்றனர்.

(படமும் தகவலும்:- மருதமுனை ஹரீஷா)

# 'கூர்மை'

## பொருளியல் துறையின் ஓர் காலக் கண்ணாடி

*(நேற்றைய தொடர்ச்சி)*

**நேற்று வெளியிட்டு வைக்கப்பட்ட கிழக்குப்பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையினரின் 'கூர்மை' சஞ்சிகை பற்றிய ஆய்வின் தொடர்ச்சி**

இதழ் 08 இல் இவ்விதழ் மிலேனிய வெளியீடாக மலர்ந்தது குறிப்பிடத்தக்கது. இவ்விதழ் ஏ.என். அஹமட் சிரேஸ்ட விரிவுரையாளரின் சமூகச் சுட்டிகள், அபிவிருத்திக்கான மாற்றீட்டு அளவுகோள் எனும் தலைப்பில் மிலேனியச் சிறப்புக் கட்டுரையாக வெளியிடப்பட்டது. பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டியும், மனித அபிவிருத்திச் சுட்டெண் அவற்றுக்கான ஆரம்ப அளவீட்டு முயற்சிகள் பற்றியும் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டமை சிறப்பாகும். இவ்விதழில் முதன் முதலாக பொருளியல் சிந்தனையாளர் பக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அரசியல் பொருளாதாரத்தின தந்தையான அடம்ஸ்மித் அவர்களின் வாழ்க்கைச் சரிதம் எழுதப்பட்டமை இவ்விதழுக்கு அலங்காரமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

இதழ் 9 இல் பேராசிரியர். மு. சின்னத்தம்பியின் ஆய்வுகளிலிருந்து தோற்றமெடுத்த தற்கால பொருளியில் பிரச்சனைகளின் தீர்வாக வெளியிடப்பட்ட நாணயமாற்று விகித முறைகளும், இலங்கையின் மாற்று விகித முறையிலேற்பட்ட அண்மைக்கால மாற்றங்களும் எனும் சிறப்புக் கட்டுரை இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மாற்று விகித நிர்ணயத்தில் மத்திய வங்கியின் தலையீடு, மிதக்கும் நாணய மாற்றுவிகித முறை, அவற்றின் நிறை குறைகள் போன்ற தற்காலப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் முன் வைக்கப்பட்டுள்ளன. சகல மட்டத்தினருக்கும், பொருளியல் ஆய்வாளர்களுக்கும் பொருத்தமான வகையில் இக்கட்டுரையின் உள்ளடக்கங்கள் தெட்டத் தெளிவாக வெளிக்கொணரப்பட்டமை மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். பொருளியல் சிந்தனையாளர் பக்கத்தில் பழம் பொருளியலாளர் வரிசையில் டேவிட் றிக்கார்டோ வாழ்க்கைச் சரிதை இடம் பெற்றமையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதழ் - 10 இல் கிழக்குப் பல்கலைக்கழகப் பொருளியல் துறைத்தலைவர் குமாரவேல் தம்பையா ஆய்வுக்கட்டுரையான ''அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கையும், இலங்கைப் பொருளாதாரத்தில் அதன் தாக்கமும்'' இடம் பெறுவது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். அமைப்பு ரீதியான சீராக்கம் அதன் கருத்தும், விளக்கமும் அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கையின் மூறைகள், அனுபவங்கள், தனியார் மயமாக்கல், வறுமையொழிப்பு போன்ற இன்றைய பொருளாதார பிரச்சினைகள் பல கோணங்களில் எடுத்துக்காட்டப்படுவதோடு அவற்றுக்கான தீர்வுகளையும் முன்வைத்துள்ளார். ஒரே பார்வையில் இலங்கையின் பொருளாதார நிலமைகளை எடுத்துக் காட்டும் வண்ணம் அமைந்து சிறப்புப் பெறுகின்றது. இவ்விதழில் ''நூலகர் ஒரு நூலக முகாமையாளர்'' எனும் தலைப்பில் திருமதி. தவமணிதேவி அருள்நந்தி, நூலகத் தலைவரினால் எழுதப்பட்ட சிறப்புக் கட்டுரையும் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. நூலக முகாமைத்துவம், நூலக நோக்கமும் அடிப்படைத்தத்துவமும், நூலக விஞ்ஞான சட்டங்கள், திட்டமிடல், தகவல் தொழில் நுட்பமும் நூலகங்களும், போன்ற நவீன தகவல்களை அடங்கிய விடயங்கள் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளமை விசேட அம்சமாகும். பொருளியல் சிந்தனையாளர் பக்கத்தில் தோமஸ் ரோபர்ட் மால்தஸ் அவர்களின் வாழ்க்கைச் சரிதமும் இடம் பெறுகின்றது.

புத்திஜீவித்துவ மக்கள் மத்தியில் கிழக்குப் பல்கலைக்கழக, பொருளியல்துறை வெளிக்கொணரும் பத்தாவது இதழான ''கூர்மை'' பள்ளிக்கூட மாணவர்கள் முதல் ஆசிரியர்கள் பலருக்கும் பயனளிக்கக்கூடிய வகையில் பல்கலைக்கழக நூலக வாரத்தினை முன்னிட்டு இவ்விதமானது சிறப்பிதழாக வெளிவருகின்றது. கையெழுத்துப் பிரதியில் ஆரம்பித்த கூர்மை ஆண்டுகள் ஆறினை எட்டிப்பிடித்து நடைபோடும் இவ்விதழானது இதுவரை வெளிவந்த இதழினை விட மேலும் மெருகூட்டப்பட்டு, அச்சுவாகன மேற்றி அச்சுப் பதிப்பாகவும் வெளிவருகின்றது.

கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர். எம்.எஸ் மூக்கையா, பொருளியல் துறைத் தலைவர் குமாரவேல் தம்பையா, வணிக முகாமைத்துவ பீடாதிபதி ந. லோகேஸ்வரன் ஆகியோரின் வாழ்த்துச் செய்தியுடன் அழகுற வெளிவருகின்றது.

கூர்மையின் வளர்ச்சிப் பாதையின் ஒவ்வொரு படியிலும் தனது அளப்பரிய ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கி கூர்மையின் வெற்றிக்கு வழிகாட்டிய பேராசான் மு. சின்னத்தம்பியின் கூர்மை தனது விழாக்காணும் இவ்வேளையில் நன்றியுடன் நினைவுகூருகின்றது. மின்கணனி 'மூலம்' அச்சுப்பதிப்பு திட்டமிடல் வேலைகளை சிரமம் பாராது ஒவ்வொரு இதழின் மலர்விலும் தன்னை முற்றாக இணைத்துக் கொள்வதோடு சிறப்பாக வெளிவரப் பல துறைகளிலும் கருமமாற்றும், எஸ். ஜெயராஜ். விரிவுரையாளருக்கும் கூர்மை நன்றி சொல்கின்றது.

கூர்மை இதழினைத் தயார் செய்து முழுமை பெறச் செய்ய ரூபா. 25 செலவகின்றது. ஆனால் புத்திஜீவிகள் நலன்கருதி ரூபா. 18 க்கே விற்பனை செய்யப்படுகின்றது. ஒவ்வொரு முறையும் மலரும் இதழும் 1500 பிரதிகள் வரை வட - கிழக்கு மாகாணத்திலும், கொழும்பிலும், மலையகத்திலும் விநியோகிக்கப்படுகின்றது. மலையக மாணவர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுத் திகழ்வதனையும் குறிப்பிடாமல் விடமுடியாது.

கூர்மை தனியொரு துறையினருக்கோ, பீடத்திற்கோ மட்டும் சொந்தமாக அமையாது சகல பீடத்தினருக்கும் சொந்தமாக விளங்கி வருவதனை கூர்மையின் ஒவ்வொரு இதழ்களும் சான்று பகர்கின்றன.

''கூர்மை'' மலர் இதழ் விரித்து மணம் வீச வேண்டும். பத்தாவது இதழாக மலர்ந்துள்ள கூர்மையை நாமும் வாழ்த்துவோம். இதன் பணி சிறக்கட்டும்.

**நல்ல தம்பி நல்லராஜா**
**கிழக்குப்பல்கலைக்கழகம்**

()()()




# சம்பியன் பட்டத்தை வென்றுள்ள என்.ஸி.ஸி.கழகம்

**எஸ்.எம்.அறூஸ் அட்டாளைச்சேனை**

**(நேற்றையத் தொடர்ச்சி....)**

இவர்களுடன் தற்போது இலங்கை ஒருநாள் போட்டி அணியில் விளையாடும் அகலங்க கனேகம மொத்தமாக 41 விக்கட்டுக்களைக் கைப்பற்றியிருக்கின்றார். ஒன்பது போட்டிகளில் சராசரி 17.19 ஆகும்.

இவரைப் போன்று மற்றுமொரு வேகப்பந்து வீச்சாளரான இசார அமரசிங்க 11 போட்டிகளில் விளையாடி 36 விக்கட்டுக்களைக் கைப்பற்றினார். சராசரி 18.69 ஆகும்.

இதே போன்று ஏனைய அணி வீரர்களும் தமது பங்களிப்பை சிறந்த முறையில் செய்திருக்கின்றனர். சுமார் எட்டு வருடங்களுக்குப் பிறகு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் என்.ஸி.ஸி.யின் முன்னாள் வீரர்கள் தமது கழகம் கொங்கொங் அல்லது மலேசியா நாட்டுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணத்தை மேற் கொள்வதற்கு சகல ஒழுங்குகளையும் செய்து வருகின்றார்கள்.

சிரேஸ்ட மற்றும் இளம் வீரர்களைக் கொண்ட என்.ஸி.ஸி. கழகம் இன்றும் போல் என்றும் சிறப்பாக பிரகாசித்து எதிர்கால இலங்கை கிரிக்கெட் அணிக்கு சிறந்த வீரர்களை உருவாக்க வேண்டும் என்று வாழ்த்துவோம்.

## சம்பியனான என்.ஸி.ஸி.அணியின் துடுப்பாட்ட விபரம் வருமாறு.


| வீரரின் பெயர் | போட்டி | இன் | ஆ.இ | ஓட்டம் | கூ.ஓ | சராசரி | 100 | 50 |
|---|---|---|---|---|---|---|---|---|
| எச்.பி.திலகரத்ன | 9 | 9 | 3 | 665 | 185* | 110.83 | 3 | 1 |
| ஆர்.பி.ஹேவகே | 11 | 15 | 2 | 784 | 200* | 60.30 | 1 | 5 |
| ஸ்.எம்.பண்டார | 11 | 12 | 5 | 331 | 63 | 47.28 | - | 2 |
| பி.ஏ.டீ.சில்வா | 4 | 5 | 0 | 197 | 83 | 39.40 | - | 2 |
| டீ.ஏ.வீரப்புளி | 7 | 9 | 1 | 305 | 83* | 38.12 | - | 2 |
| எம்.என்.நவாஸ் | 12 | 17 | 3 | 530 | 97 | 37.85 | - | 5 |
| ஸ்.பி.மாப்புத்துன | 9 | 12 | 2 | 295 | 104 | 29.50 | 1 | - |
| ஆர்.ஆர்.திஸ்சேரா | 12 | 16 | 0 | 414 | 56 | 25.87 | - | 3 |
| ஆர்.எஸ்.கல்பகே | 4 | 5 | 1 | 91 | 41 | 22.75 | - | - |
| ஜி.டீ.ஸீரூபசிங்க | 3 | 5 | 2 | 68 | 42* | 22.66 | - | - |
| கே.எல்.எஸ்.கமகே | 2 | 4 | 0 | 89 | 57 | 22.25 | - | 1 |
| டீ.எச்.எஸ்.பிரதீப் | 8 | 9 | 1 | 162 | 56 | 20.25 | - | 1 |
| கே.ஆர்.புஸ்பகுமார | 6 | 6 | 0 | 117 | 43 | 19.50 | - | - |
| எஸ்.மத்தநாயக்க | 3 | 4 | 1 | 52 | 21 | 17.33 | - | - |
| டீ.எம்.ராமநாயக்க | 4 | 5 | 0 | 55 | 19 | 11.00 | - | - |
| கே.சங்கக்கார | 2 | 3 | 0 | 33 | 14 | 11.00 | - | - |
| டீ.எல்.பெர்ணாண்டோ | 2 | 3 | 0 | 26 | 15 | 8.66 | - | - |
| எம்.ஜே.எம்.றுஸ்த்தி | 2 | 2 | 0 | 15 | 15 | 7.56 | - | - |
| ஸி.ஏ.கனேகம | 9 | 9 | 1 | 58 | 16* | 7.25 | - | - |
| ஸீ.ஸீ.ஜே.பீரிஸ் | 1 | 1 | 0 | 5 | 5 | 5.00 | - | - |
| எம்.கே.ஐ.அமரசிங்க | 11 | 7 | 5 | 9 | 5 | 4.50 | - | - |

குறிப்பு:- (போட்டி, இன்னிங்ஸ், ஆட்டமிழக்காமல், கூடிய ஓட்டம், சராசரி, சதம், அரைச்சதம்) (*ஆட்டமிழக்காமை)

## பந்துவீச்சு விபரத்தைப் பார்ப்போம்

| வீரரின் பெயர் | போட்டி | ஓவர் | ஓ.ம. ஓவர் | ஓட்டம் | விக்கட் | சராசரி | சிறப்பானது |
|---|---|---|---|---|---|---|---|
| ஆர்.எஸ்.கல்பக்கே | 4 | 87.1 | 28 | 155 | 16 | 9.68 | 7/27 |
| கே.எல்.எஸ்.கமகே | 2 | 2 | 0 | 16 | 1 | 16.00 | 1/16 |
| ஸீ.ஏ.கனேகம | 9 | 224.4 | 41 | 705 | 41 | 17.19 | 5-34 |
| டீ.ஐ.அமரசிங்க | 11 | 253.4 | 59 | 673 | 36 | 18.69 | 5-34 |
| ஸி.எம்.பண்டார | 11 | 269.4 | 53 | 830 | 43 | 19.30 | 5-58 |
| பி.ஏ.டீ.சில்வா | 4 | 88.4 | 25 | 195 | 10 | 19.50 | 5-53 |
| கே.ஆர்.புஸ்பகுமார | 6 | [illegible].5 | 21 | 275 | 12 | 22.91 | 3-60 |
| எச்.பி.திலகரத்ன | 9 | 139.3 | 31 | 365 | 14 | 26.7 | 3-54 |
| எம்.என்.நவாஸ் | 12 | 8 | 1 | 29 | 1 | 29.00 | 1-29 |
| எம்.ஜே.எச்.றுஸ்த்தி | 2 | 37 | 6 | 118 | 4 | 29.50 | 2-37 |
| எஸ்.மத்தநாயக்க | 3 | 55 | 14 | 158 | 4 | 39.50 | 2-45 |
| டி.எச்.எஸ்.பிரதீப் | 8 | 88.3 | 15 | 275 | 6 | 45.83 | 2-34 |
| எஸ்.பி.மாப்பத்துன | 9 | 25 | 3 | 93 | 1 | 93.00 | 1-16 |
| ஸ்.டி.ரூபசிங்க | 3 | 29.4 | 3 | 102 | 1 | 102.00 | 1-13 |

இவர்களுடன் பந்துவீசி இருக்கின்றார்கள். இவர்கள்:- டி.ஏ.வீரப்புளி 2-0-7-0, டி.எல்.பெர்ணாண்டோ 1-0-8-0, ஆர்.பி.கேவகே 3-0-12-0, ஸ்.ஸீ.ஜே.பீரிஸ் 11-1-49-0

**யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக வியாபார கற்கைகள் பீட முகாமைத்துவ கணக்கியில் மாவணர் ஒன்றியத்தினால் எக்சட்டிவ் (EXECUTIVE) என்ற சஞ்சிகை அண்மையில் வளாக கலையரங்கில் வெளியீடு செய்யப்பட்டது. இதன்போது பிரதம அதிதியாக வருகை தந்த வளாக முதல்வர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் சிறப்புரை ஆற்றுவதையும், வருகைதந்த முன்னாள் முதல்வர் பேராசிரியர் என்.பாலகிருஸ்ணன் விளக்கேற்றுவதையும் அருகில் ஒன்றியத் தலைவர் எஸ்.கிருஷ்ணகுமார், வியாபாரக் கற்கைகள் பீடாதிபதி ஆர்.நந்தகுமார் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (படமும் தகவலும்:- மயூரவதனன்)**

# வாசகர் நெஞ்சம்

## ஆசிரியர்கள் பற்றாக்குறையும் கல்வி உயர் அதிகாரிகளின் அலட்சியப் போக்கும்

கிளிவெட்டி மகா வித்தியாலயம் ஒரு கொத்தனிப் பாடசாலையாக விளங்கியதோடு அங்கு தற்போது உயர்தர கலைப்பிரிவில் 60 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர்.

இந்த மாணவர்களுக்கு மூன்று பட்டதாரி ஆசிரியர்கள் பாடங்கள் கற்பித்து வந்தனர். இதில் இரண்டு ஆசிரியர்கள் வேறு பாடசாலையிலிருந்து இணைப்புச் சேவையின் மூலம் கற்பித்து வந்தவர்கள். இவர்களுக்குப் பதிலாக வேறு ஆசிரியர்களை நியமிக்காமல் திடீர் என (04.06.2001) அவர்களை தங்களது பழைய பாடசாலைக்கு அனுப்பியதால் இங்குள்ள 60 மாணவர்களின் கல்வி நிலை கேள்விக் குறியாக்கப்பட்டிருப்பது தொடர்பாக இற்றை வரையும் ஆசிரியர்கள் நியமிக்காமல் இருப்பது, கல்வி அதிகாரிகள் இது தொடர்பாக கவனம் செலுத்தாது இருப்பது அதிகாரிகளின் அலட்சியப் போக்கினை எடுத்துக் காட்டுகிறது.

அத்தோடு ஒரு வருட காலமாக விவசாயப் பாடத்திற்கும் மனையியல் பாடத்திற்கும் ஆசிரியர்கள் நியமிக்காமல் க.பொ.த. (சா/த) மாணவர்கள் பாதிக்கப்பட்டுக்கொண்டிருப்பது மற்றுமொரு செயலாகும்.

எனவே இவ்வாறான இந்த அலட்சியப் போக்கினை விடுத்து மாணவர்களுடைய கல்விக்காக கருணை கூர்ந்து கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

**எஸ்.ரவிந்திரராஜன்**
**கிளிவெட்டி**
**பாடசாலை பழைய மாணவர் சங்க உறுப்பினர்**

## தாதியரின் அசமந்தப் போக்கு

களுவாஞ்சிகுடி மாவட்ட வைத்தியசாலையில் தியாக மனப்பான்மையுடன் சேவை புரியும், டாக்டர் கே.வசீகரனின் சேவை அங்கு கடமை புரியும் சில தாதிமார்களினால், நிர்மூலமாக்கப்படுவது கவலைக்குரியதாகும்.

கடந்த 18ம் திகதி பி.ப.3 மணிக்கு பிரசவ வேதனையுடன் துடிதுடித்த பிரசவத் தாயை எதுவித பரிசீலனையும் செய்யாமல் அங்கு கடமையில் இருந்த தாதி கடினமான வார்த்தையுடன், நாங்கள் விடுதியை இடிக்கப்போகின்றோம், கல்லாறு கொண்டு செல் என்றாறாம். இந்த நிலையை மாவட்ட வைத்திய அதிகாரியிடம் முறையிட்டபோது தாதியை பேசிவிட்டு நோயாளியை அனுமதித்தார்.

டாக்டர் இல்லாது இருந்திருந்தால் நோயாளியின் நிலை என்ன? பல வருடங்கள் மருத்துவத் துறையில் தாதியாக இவர் ஆற்றிய சேவை இதுதானா? இவர் தாதியா? அல்லது கட்டட ஒப்பந்தக்காரரா? பிரதி சுகாதார சேவை பணிப்பாளர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவருக்கான நடவடிக்கையை மேற்கொள்ளாவிடின் பொது மக்களாகிய நாங்கள் வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கு மேலும் உயர் அதிகாரிகளிடம் முறையிட வேண்டிய நிலை உண்டாகும்.

**இராசையா-தருமராசா**
**பெற்றோல் நிலைய வீதி**
**களுவாஞ்சிகுடி**

## உறங்குமிடமாக மாறும் வாசிகசாலை

பெரிய நீலாவணையில் விஷ்ணு சனசமுக நிலையத்தினரால் நடாத்தப்பட்டுவரும் வாசிகசாலை அப்பகுதியைச் சேர்ந்த சிலருக்கு உறங்குவதற்கான இடமாக மாறிவருகிறது.

கல்முனை நகரசபையால் இந்த வாசிகசாலைக்காக பல பத்திரிகைகள் வழங்கப்பட்டு வருகிறது. அந்த பத்திரிகைகளைப் பார்க்கவரும் வாசகர்களுக்கு இடைஞ்சலும், தொந்தரவும் கொடுக்கும் வகையில் பத்திரிகை வைத்துப் பார்க்கும் மேசைமீது ஏறி பலர் படுத்து உறங்குகிறார்கள். அது மட்டுமன்றி தனிப்பட்ட தமது வீட்டுக் கதைகளைப் பேசுவோரும், மற்றவரைப் பற்றி புறம் பேசும் குழுக்களும் வந்து கூடி கும்மாளமிடும் இடமாகவும் இது இருக்கிறது. மேற்படி சனசமுக நிலைய நிருவாகத்தினரும் இதில் அடக்கம்.

எனவே, தினக்கதிரூடாக வெளிப்படும் செய்தி மூலமாவது இவ்ர்கள் திருந்துவார்களா?

**என்.சௌவியதாசன்**
**பெரிய நீலாவணை**

## மண்முனைத் துறை வீதியை தாமதியாது செப்பனிடவும்

எதிர்வரும் பண்டாரியவெளி நாகதன்பிரான் ஆலய உற்சபம் மற்றும் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரம் தாந்தாமலை முருகன் ஆலயங்கள் அடுத்து, அடுத்து மாதங்களில் ஆரம்பமாக உள்ளன.

மண்முனைத் துறையிலிருந்து கொக்கட்டிச்சோலை வழிவரை குவிக்கப்பட்டிருக்கும் கிறவல் மண்ணையும் வீதிகளில் உள்ள பள்ளங்கள், குழிகள் என்பவற்றையும் தாமதியாது செப்பனிடுமாறு உரிய அதிகாரிகளை தினக்கதிர் பத்திரிகை வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

**எம்.அருள்சசி**
**மகிழைத்தீவு**
**கொக்கட்டிச்சோலை**

# தினக்கதிர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்ட போட்டியும், பரிசளிப்பும்

(நமது நிருபர்)

**தினக்கதிர் ஓராண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட 'தினக்கதிர்' வெற்றிக் கிண்ண உதைபந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டம் நாளை ஞாயிறு மாலை 4மணிக்கு வெபர் மைதானத்தில் நடைபெறவுள்ளது.**

இப்போட்டியில் பாடுமீன் கழகத்தை எதிர்த்து இக்னேஷியஸ் விளையாட்டுக் கழகம் விளையாடவுள்ளது.

போட்டியின் முடிவில் பரிசளிப்பு வைபவமும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் 'தினக்கதிர்' பிரதம ஆசிரியர் எஸ்.எம் கோபாலரத்தினம் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார். மட்டக்களப்பு உதைபந்தாட்டச் சங்கத்தின் சார்பில், அதன் தலைவர் பீ.சத்தியமூர்த்தி செயலாளர் எஸ். தர்மரட்ணம் மற்றும் விளையாட்டுக் குழுத்தலைவர் ஏ. வேதநாயகம், குழுச் செயலாளர் எஸ். தேவராஜா, பொருளாளர் தோமஸ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# 8 லட்சம் இலங்கையர்கள் வெளிநாடுகளில் தஞ்சம்

(நமது நிருபர்)

8 இலட்சத்து 17 ஆயிரம் இலங்கையர்கள் அகதிகளாக வெளி நாடுகளில் தஞ்சமடைந்துள்ளதாக ஐ.நாவின் அறிக்கையில் இருந்து தெரிய வருகின்றது. இவர்களில் 4 லட்சம் பேர் கனடாவில் வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை மேலும் 8 லட்சம் பேர் - நாட்டின் சனத்தொகையில் 4 சதவீதமான மக்கள் - உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்து வாழ்ந்து வருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கனடாவுக்கு அடுத்தபடியாக ஐரோப்பிய நாடுகளில் 2 இலட்சம் பேரும், இந்தியாவில் 67 ஆயிரம் பேரும், அமெரிக்காவில் 40 ஆயிரம் பேரும், ஆஸ்திரேலியாவில் 30 ஆயிரம் பேரும் மேலும் 12நாடுகளில் 80 ஆயிரம் பேரும் தஞ்சமடைந்துள்ளதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# ஹக்கீமின் பதவி விலகக்லுக்கு புலனாய்வு பிரிவினரின் அறிக்கையே காரணம்!

(நமது நிருபர்)

ரவூப் ஹக்கீம் பற்றி புலனாய்வுப் பிரிவு வழங்கிய தவறான தகவல்களை ஜனாதிபதி சந்திரிகா நம்பியதாலேயே அவரது அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டு, அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சக நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு ஹக்கீமுக்குக் கிடைக்காது என்றும் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே அவரது கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் ஹக்கீம் பதவி விலக்கப்பட்டால், தேசிய ஐக்கிய முன்னணித் தலைவர் பேரியல் அஷ்ரப் அவருக்கு ஆதரவு தெரிவிக்க மாட்டார் எனவும் தேசிய புலனாய்வுத் துறையினர் ஹக்கீம் பற்றிக் கொடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்ததாகவும் - அதன் அடிப்படையிலேயே அவரை அமைச்சர் பதவியிலிருந்து விலக்கும் முடிவை ஜனாதிபதி தன்னிச்சையாக எடுத்ததாகவும் கூறப்படுவதாக இணையத்தளம் ஒன்றில் தகவல் வெளியாகி உள்ளது. ஹக்கீமின் பின்னால் முஸ்லிம் காங்கிரஸ் அணிதிரளும் என்பதை ஜனாதிபதியும், அவரது ஆலோசகர்களும் எதிர்பார்க்கவில்லை என்றும் அரசியல் வட்டாரங்கள் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊரடங்கு மேலும் தளர்வு

(யாழ் நிருபர்)

குடாநாட்டில் அமுல் செய்யப்பட்டு வரும் இரவு நேர ஊரடங்குச் சட்டம் மேலும் ஒரு மணி நேரம் தளர்த்தப்பட்டிருப்பதாக யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. தற்சமயம் இரவு 9 மணி முதல் அதிகாலை 5 மணிவரை அமுல் செய்யப்படும் ஊரடங்குச் சட்டம் இன்று தொடக்கம் இரவு 10 மணி முதல் அதிகாலை 5 மணி வரை அமுல் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது தொடர்பான உத்தியோக பூர்வ அறிவிப்பை பலாலியில் உள்ள படைத் தலைமையகம் நேற்று முன்தினம் வெளியிட்டது.

# 2000ம் ஆண்டு தமிழ் நூல்களுக்கு பரிசுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்

(நமது நிருபர்)

2000ம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட தமிழ் சிறந்த நூல்களுக்கு பரிசளித்தல் தொடர்பாக கலாசார அலுவல்கள் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு:

2000ம் ஜனவரி 1ம் திகதி முதல் 2000ம் 31ஆம் திகதி வரை (இரு தினங்களும் உட்பட) வெளிவந்த நூல்களின் ஆசிரியர்களிடமிருந்து சிறந்த தமிழ் நூல்கள் பரிசுத் தேர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நூலாசிரியர் இலங்கையராகவிருத்தல் வேண்டும். நூல்களை அனுப்பவிரும்பும் ஆசிரியர்கள் இதற்கான விண்ணப்பத்தை நேரில் அல்லது சுயமுகவரியிட்ட தபாலுறை ஒன்றைச் செயலாளர், தமிழ் இலக்கியக் குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம், 8வது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

பரிசுத் தேர்வில் பங்கு கொள்ளவிரும்புவோர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் நூலின் ஐந்து பிரதிகளை அஞ்சல் மூலம் அனுப்பி வைக்குமாறு அல்லது நேரடியாக கையளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

2001ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6ம் திகதி விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளும் கடைசித் திகதியாகும்.

2001ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30ம் திகதி விண்ணப்பங்களுடன் நூல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினமாகும் என்பதை கவனத்திற் கொள்ளவும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நம்பிக்கை....

இறுதித்தீர்மானம் எடுத்த பின்னரே இது பற்றித் தீர்மானிக்குமென அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான விவாதம் அடுத்த மாதம் இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. விவாதத்துக்கு எடுக்கப்படும்போது ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஆதரவு வழங்கவுள்ளதாக ஐ.தே.கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் ஐ.தே.கவுக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் பேச்சுக்கள் இடம் பெற்றுள்ளன.

அரசுக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்படியும் - தமது கட்சி உறுப்பினர்களின் கையொப்பம் இல்லாமல் அந்தப் பிரேரணையைச் சமர்ப்பிப்பதற்கு தாம் எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை என்றும் - அந்தப் பேச்சுக்களின்போது ஜே.வி.பி. பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐ.தே.கட்சி சார்பில் ரணில் விக்கிரமசிங்க, கருஜெயசூரியா லொக்கு பண்டார, கே.என். சொக்ஸி ஆகியோரும் -ஜே.வி.பி. சார்பில் நந்தன குணதிலக, அனுர திஸநாயக்க ஆகியோரும் -பேச்சில் கலந்து கொண்டனர்.

## கி.பல்கலைக்கழக....

பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கொழும்புப் பல்கலைக் கழகக் கல்விப்பீட பேராசிரியரின் உரையும் இடம் பெற்றது.

ஆசிரியர்கள் சார்பில் நுண்கலைத்துறை விரிவுரையாளர் எஸ். ஜெயசங்கர் மாணவர் சார்பில் வணிக முகாமைத்துவ மாணவன் எஸ். ராகுலன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

நன்றியுரையினை நூலக உதவியாளர் பி.சுப்பையா நிகழ்த்தினார். தொடர்ந்து புத்தகக் கண்காட்சியும், விற்பனையும் இடம் பெற்றது.

இதில் யுனைட்டட், புத்தக சாலை, சக்தி நூல் நிலையம், கொழும்பு ஜெயா புத்தக நிலையம், பூபாலசிங்கம் புத்தகசாலை என்பவற்றுடன் இராமகிருஷ்ணமிஷன் புத்தகசாலை, இந்து சமய கலாசார பண்பாட்டலுவல்கள் அமைச்சு, சூர்யா பெண்கள் அபிவிருத்தி நிலையம் எனபனவும் புத்தக கண்காட்சியினையும் நூல் விற்பனையும் நிகழ்த்தினர்.

நூல் வெளியீட்டாளர் பௌசர் புத்தக ஆர்வலர், இலக்கியவாதி எஸ்.எல்.எம்.ஹனிபா ஆகியோரது சேகரிப்புகளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

பெருந்தொகையான பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆர்வலர்கள் கண்காட்சியைக் கண்டுகளித்தனர்.

கண்காட்சியும், புத்தக விற்பனையும் தொடர்ந்து இன்றும், நாளையும் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'தினக்கதிர்' கண்காட்சி

(நமது நிருபர்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தினர் நடத்தும் நூலக வார புத்தகக் கண்காட்சியில் தினக்கதிர் பத்திரிகைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை வெளிவந்த தினக்கதிர் பத்திரிகைகளும், மற்றும் தினக்கதிர் பத்திரிகையின் சில முக்கிய பகுதிகளும் இதில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

# சந்தேக நபர் தலைமறைவு

கோரகல்லி மடு கொலனியில் இடம் பெற்ற வல்லுறவுச் சம்பவம் தொடர்பான சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என தெரிய வருகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## புன்னச்சோலை....

தீமிதிப்பில் ஈடுபட்டனர்.

கடந்த வருடம் சுமார் ஐயாயிரம் பேரே தீ மிதித்தலில் கலந்து கொண்டதாகவும் தற்போது இத்தொகை அதிகமாகவுள்ளதாக ஆலய பரிபால்ன சபையினர் தெரிவித்தனர்.

இலங்கையில் உள்ள இந்து ஆலயங்களில் அதிக எண்ணிக்கையிலான அடியார்கள் தீப்பாயும் ஆலயமாக சிறப்புற்று விளங்குவதும் குறிப்பிடத்தக்கது.

## தினக்கதிர்....

கே.தவராசா பிரதேச செயலாளர் பாஸ்கரன், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திருமதி ல.கதிரமலை ஆகியோரும், சிறப்பு அதிதிகளாக தினக்கதிர் இணையாசிரியர் றூஷாங்கன் இளைஞர். சேவை அலுவர் கே.ரதீஸ்வரி, உதவி இளைஞர் சேவை அலுவலர் கே. சுந்தரலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் கவிஞர் எருவில் மூர்த்தி என அழைக்கப்படும் நா.ஏரம்பமூர்த்தி, அண்ணாவியார் வீ.இராசமாணிக்கம் எருவில் கலிங்கன் இ.நாகலிங்கம் ஆகியோர் பாராட்டி கௌரவிக்கவுள்ளனர்.

## மூதூர் பிரதேச......

விநாயகபுரம் ஆகிய கிராமங்களில் வியாழன் காலை படையணி ஒன்று பிரவேசித்து தேடுதல மற்றும் சுற்றி வளைப்பை நடத்தி விட்டு நண்பகலுக்குப் பின்னர் வெளியேறியதாக அவ்வூர்வாசிகள் தெரிவித்தனர். மக்களிடமிருந்து தேசிய அடையாள அட்டைகளை வாங்கிப் பார்வையிட்ட இராணுவத்தினர் ஆறு தமிழப் பொதுமக்களை விசாரணைக்காக மகிந்தபுர இராணுவ முகாமுக்கு கூட்டிச் சென்றனர் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. மாலையில் அவ்வாறு பொதுமக்களும் விடுவிக்கப்பட்டனர்.

இந்த இராணுவ நடவடிக்கை காரணமாக அக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மூதூர் நகருக்கு வரவில்லை. அத்துடன் அக்கிராமங்களுக்கான பஸ், மற்றும் போக்குவரத்து ஸ்தம்பித நிலையை அடைந்தது.

# படையினரின் துப்பாக்கிச்சூட்டில் இரு இளைஞர்கள் பலி!

(யாழ் நிருபர்)

யாழ் குடாவில் நேற்று மாலை படையினர் மேற்கொண்ட துப்பாக்கிபிரயோகத்தில் இரண்டு இளைஞர்கள் பலியாகியுள்ளனர்.

தனங்காகம் பிள்ளையார் ஆலயப்பகுதியை சுற்றிவளைத்த படையினரே துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் பலியான இருவரது சடலங்களும் யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளே உயிரிழந்ததாக படையினர் தெரிவித்துள்ளனர்.

# பேரியல் அணிக்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணி!

(நமது நிருபர்)

அம்பாறை மாட்டத்திலுள்ள கல்முனைக்குடி சாய்ந்தமருதுப் பகுதிகளில் நேற்று ஆர்பாட்டப் பேரணிகள் இடம் பெற்றுள்ளன.

அமைச்சர் பேரியல் அஷ்ரப் உட்பட நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்க தரப்பினை விடுத்து எதிர்கட்சி ஆசனங்களில் அமர்ந்த முஸ்லிம் காங்கிரஸின் ஏகோபித்த ஒற்றுமையைக் காட்ட வேண்டுமெனக்கோரியே ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். கல்முனைக்குடி சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாயல்களில் விஷேட பூசை, பிரார்த்தனையில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

பிரதியமைச்சர் பதவிக்காக இனத்தை காட்டிக் கொடுக்க வேண்டாம், சமூக ஒற்றுமைக்கு துரோகம் இளைக்க வேண்டாம், ரவூப் ஹக்கீம் எமது தலைவர் என்ற கோசங்கள் எழுப்பப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பத்திரிகை வேல்ட் வெரயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.